தென்மொழி

பிரபாகரன்
பிறந்தநாள் வாழ்த்து!

'பிரபா கரன்' எனும் பிள்ளை வேங்கை
உரமாய்த் தமிழினம் உய்ய உயிர்தந்து
திருவார் தமிழீழம் தேடப் பிறந்தான்!
பெருமானத் தமிழன்! பெறலரும் வீரன்—அவன்
உருவான நாளெண்ணி ஊதாயே சங்கம்!
ஓங்குகவன் புகழென்றே
ஒலிப்பாயே முரசம்!

இந்தியப் பெரும்படைக்கு எதிர்நின்ற வெம்புலி!
கொந்திய நெஞ்சாங் குலையினி லிருந்து, அவன்
சிந்திய அரத்தத்தால் சிவந்தது தமிழீழம்!
பிந்திய தமிழ்மறம் பேணிப் புரந்தான்!—அவன்
வந்தலர்ந்த நாள்மகிழ்ந்து பாடுகவே வாழ்த்தும்!
வளர்கஅவன் புகழென்றே
மீட்டுகவே யாழும்!

மறந்த தமிழினத்தின் மறஞ்சொன்ன வேந்தன்!
இறந்த இனப்புகழை ஏற்றிவைத்த வீரன்!
திறந்த மார்பொடு பகையினைத் தீர்த்த
சிறந்த இராவணற்கும் சிறப்பளித்த தமிழன்!—அவன்
பிறந்தொளிர்ந்த நாள்நினைந்து பேரிகையே முழங்கு!
பெற்றான்காண் பெரும்புகழும்!
பிளிறுகவே வேழம்!

ஆசிரியர்
பெருஞ்சித்திரனர்

சுவடி : 25
ஓலை : 4

விலை:
உருபா: 2-00

நமக்கு வந்த மடல்கள்.

○ : 1379 : பேரன்புமிக்க பெரும்பேராசான், அன்னைத் தமிழ்த்தாய் ஈன்றெடுத்த அருட்செல்வன், திண்ணமாய் இத் தமிழ்நிலத்தை மீட்டெடுக்கப் போகும் செயல்வீரன், வாழ்ந்து கொண்டுள்ள, இந்நூற்றாண்டுக் கம்பநாடன், புதிய வரலாறு புதுக்கவிருக்கும் புத்துலகச் சிற்பி,—எதற்கும், எவனுக்கும் தலை-வணங்கா அரிமா!—இதுநாள்வரை தன் தூவல் முனையை எதற்காகவும், எவனுக்காகவும் சாய்த்து ஓடவிடாத கொள்கை வீரன்!

'தென்மொழி' வந்தது! என் நெஞ்சம் குளிர்ந்தது! துன்பம் விலகியது!! 'தென்மொழி' (சுவடி 24, ஓலை.9), அட்டைப்படப் பாடல்—வாயிலாக எதிர்காலப் பாவலர்கள், தங்கள் செவ்வாய்—திறந்து, வீறுகொண்டு, புரட்சியூற்றுப் பொங்கிட, புதுமுரசு கொட்டி 'இனவொலி' எழுப்பிடவும், பாடிப்பாடிப் பார்த்து, 'நெஞ்சுரம்' பெற்றிடவுந் தக்கதான, நெருப்பு நிகர்ப்பாடல் ஒன்றைத் தந்து, அடலேற்றுப் பெரும் பாவலராய்ச் சுடர்விட்டு ஒளி வீசி நிற்கின்றீர்கள்!

பாடலின் ஒவ்வொருவரியும், படிக்கும் ஒவ்வொரு உண்மைத் தமிழனின் 'குருதி'யைச் சூடேற்றுவதும், நரம்புகளை முறுக்கேற்றுவதும், 'மீசை'யை முறுக்கித் தோளை உயர்த்தச் செய்வதும் உண்மையிலும் உண்மை!

பொன்னேரியில் இருந்து ஓடிவந்து ஆறுதலும் தேறுதலும் கூறிய அருள் நெஞ்சத்தைப் பற்றியறிந்து வியந்தேன்! பொன்னேரியாரை ஒத்த பாசமலர்களைத் தெரிந்து கண்ணில் ஒற்றினேன்! வெங்காலூர் அருள்மணியாரின் அன்பில் உறைந்-தேன்!! அம்மவோ! எத்துணை ஆழ அன்பு! எவ்வகைக் கொள்கை உரவு!! அவரைத் தொடர்ந்து, இதழ் தடைப்படாதிருக்கும் பொருட்டு, சொல்லுக்குச் சொல் உருபா கணக்கிட்டுத் தொகை தந்து ஊக்கப்படுத்திய ஒளிதரு நெஞ்சத்தினரையெல்லாம் அறிந்து மகிழ்ந்தேன்!

''விளைத்து விடமுடியும் இம் மண்ணில் நல்ல விளைவை''—என்ற உறுதி பெற்றேன். ''எங்கே பாவலரேறின் இத்துணைக் கடுமையான உழைப்பும், தந்நலமற்ற செற்பாடுகளும், அறிவு நலஞ்சான்ற ஆக்கங்களனைத்தும், வீணாகி விடுமோ?! இவற்றையெல்லாம் புறந்தள்ளி, இத்தமிழன் வேறுதிசையில் போய் விடுவானோ!'' என்றெல்லாம், மிகவும் கவலை வயப்பட்டிருந்த, என் உள்ளத்துக் கவலையெல்லாம் நீங்கிப் புத்துணர்ச்சி சூழப் பெற்று, புதுத்தென்பு பெறவும் முடிந்தது!

— பாவலர். தமிழ்க்கனல் கண்டிதம்பட்டு.

○ : 1380 : பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அய்யா அவர்-களுக்கு! தங்களுக்குப் பணிவான என் வணக்கங்கள். தங்களின் பாடல்களை நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்து வருகின்-றேன். படித்து வருகின்ற நண்பர்களிடமெல்லாம் சொல்லிச் சொல்லி மகிழ்கின்றேன். ஒவ்வொரு பாடலைப் பற்றியும் தனித் தனி மடலே எழுதலாம். ஆயினும் அ'து இயலாதது.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப் பக்கம்.)

Scanned with CamScanner

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[திருவளம் தி. பி. 1990 (1959)]

தென்மொழி

மொழி — இனம் — நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல் களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடி யாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன் னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடு பட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி : 847829)

சுவடி 20] உ0க௬ கன்னி-துலை-நளி (அக்-திசம். 89') [ஓலை: 4

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி!

பழந்தமிழகத்தில் புலமை என்னும் சொல் அறிவையும், புலவர் என்னும் சொல் அறிஞரையும் குறித்தன. அறிஞர் என்னும் சொல்லின் வேறு வடிவமான அறிவர் என்னும் சொல் இல்லறத்துறவியைக் குறித்தது. பின்னர், புலவர் என்னும் சொல் பாடல் எழுதும் அறிஞரைச் சிறப்பாகவும், தமிழறிஞரைப் பொதுவாக-வும் குறித்து வந்தன. இக்கால் அறிஞர் என்னும் சொல் அனைத்-துத் துறை அறிஞரையும் குறிக்கும் ஒரு பொதுச் சொல்லாகப் பயன்படுகிறது. எனவே, தமிழ்ப் படித்த அறிஞரைத் தமிழறிஞர் என்று சிறப்பாகக் குறிக்க வேண்டியுள்ளது.

இக் காலத்தில் தமிழறிஞர்கள் எனப் பெறுவோர் பல கூறுக-ளாகப் பிரிந்தியங்கும் அனைத்துத் தமிழ்மொழி முன்னேற்ற முயற்சியுடையவர்களாக இருக்கின்றனர். அவர்கள், தமிழ்மொழி பயிற்றுவிக்கும் உயர்பள்ளித் தமிழ் ஆசிரியர்கள், கல்லூரித்

தமிழ்ப் பேராசிரியர்கள், தமிழ்மொழி ஆராய்ச்சியறிஞர்கள், தமிழ் இலக்கியப் பொழிவாசிரியர்கள், தமிழ் இலக்கியப் படைப்பாளர்கள், செந்தமிழ்ப் பாவிய ஆசிரியர்கள், தமிழ்ச் சொல்லாய்வறிஞர்கள், தமிழ் இலக்கணப் புலவோர்கள், தமிழ் மொழி வரலாற்றறிஞர்கள், தமிழ் அகராதித் தொகுப்பாசிரியர்கள், தமிழ்மொழி பெயர்ப்பாசிரியர்கள் தமிழ் படைப்பிலக்கியத் திறனாய்வாளர்கள், தமிழ் இலக்கியப் பதிப்பாசிரியர்கள் முதலியோர் ஆவர்.

பெரும்பாலும், தமிழறிஞர்கள் எனப் பெறுவோர், பழந் தமிழகத்தில், அவர்கள் இலக்கிய, இலக்கணப் படைப்பாசிரியர்களாயினும், உரையாசியர்களாயினும், பாவிய ஆசிரியர்களாயினும், தமிழ்மொழியின் மேல் பற்றுடையவர்களாகவும், முழுமையாகத் தமிழ்மொழி இலக்கண, இலக்கிய அறிவு பெற்றவர்களாகவும், அதன் வளர்ச்சியில் முழு அக்கறையுடையவர்களாகவும், தம்மால் தமிழ்மொழி ஆக்கத்திற்கு எவ்வளவு நேர்மையாக, அறிவாற்றலுடன் உழைக்க முடியுமோ, அந்த அளவிற்கும் உழைத்தார்கள். அதனால் பல்வேறு வகையான அற நூல்கள், வாழ்விலக்கியங்கள், சமய இலக்கியங்கள், சிறு பாவியங்கள், பெரும் பாவியங்கள், இலக்கண நூல்கள் முதலியன தோன்றி, மொழி வளர்ச்சிக்கும் வளத்திற்கும், இன ஒற்றுமைக்கும், பண்பாட்டு, நாகரிகக் கட்டுரைக் கோப்பிற்கும் உதவின.

தொல்காப்பியம், திருக்குறள், அகநானூறு, புறநானூறு முதலிய தொகை நூல்கள், பத்துப்பாட்டு ஆகிய கழகக்கால நூல்கள், பதினெண்கணக்கு ஆகிய அறிவிலக்கியங்கள், கம்ப இராமாயணம், வில்லிபாரதம் முதலிய பெரும்பாவிய நூல்கள், திருமந்திரம், திருவிளையாடல் புராணம், தேவாரம், திருவாசகம், சிவஞானபோதம், ஆழ்வார் பாசுரங்கள் முதலிய சமய நூல்கள், நன்னூல், காரிகை முதலிய இலக்கண நூல்களெல்லாம் தோன்றி நம் அருந் தமிழ்மொழியை அகத்தும் புறத்தும் பெருவளமுடையதாக ஆக்கின.

ஆனால், இத்தகு நூல்கள் செய்திறனும், தமிழ்மொழிச் செம்புலமையும், அறிவாற்றலும் வரவரப் பேரளவில் குன்றி, நம் அளப்பரும் வளமுடைய நிலப்பெருந் தனித்தூய தாய்மொழியாம் தமிழ்மொழியை வறுமையுடையதாக்கித் தமிழரின் வளர்ச்சியையே வெறுமையுடையதாக்கிவிட்டது; இன்று இவ்விருபதாம் நூற்றாண்டின் இறுதியிலோ இந்நிலை இன்னும் கேடும் கீழ்மையும் எய்திவிட்டது! இதை ஆழ நினைக்கையில் நம் அரும்பெறல் ஒண்தீந்தமிழ் இவ்வாறு இருளும் மருளும் ஒருங்கே அண்டிக் கலையிழந்து காட்சி தருகிறதே, ஐயகோ-என்று உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் நாளும் வருந்தித் துடிக்கின்றன.

இன்றைய நிலையில் பள்ளித் தமிழாசிரியர்கள், தம் பச்சிளம் பள்ளி மாணவர்களுக்குத் தமிழையா கற்பிக்கின்றனர்? வட

மொழியும். ஆங்கிலமும் இந்தியும் உருதும் அரபியும் கலந்த கலப்பு மொழியை உலப்பும் உளறுவாயர்களாகவன்றோ காட்சி தருகின்றனர். இலக்கணம் என்றால் படி என்ன விலை என்று கேட்கும் அளப்பர்களாக வன்றோ அவர்கள் உள்ளனர்; நாள்தோறும் தமிழ் வகுப்புகளில் அவர்கள் கற்பிப்பன எவை? அரசியல் கட்சி விளம்பரங்களையும், திரைப்படக் கூத்தியரின் உடலசைவுக் கோணல்களை நடித்துக் காட்டும் முக்கல் முணுகல் பாடல்களையும், திரைப்படக் கூத்தர்களின் சொடுக்கு நடிப்புகளையுமன்றோ அவர்கள் தம் அருந்தவ மாணவர்களுக்குக் கற்பிக்கின்றனர். திருக்குறளைக் கல்லாகவும், கம்பராமாயணத்தை இரும்பாகவும் கருதிக் கொண்டு, அவற்றை இடித்து அறுத்துப் பொடி செய்து, நகைச்சுவை நீர்விட்டுக் கலக்கியன்றோ அம் மாணவர்களின் செவிகளிலும் வாய்களிலும் ஊற்றுகின்றனர். இன்னோரன்ன தமிழாசிரியர்களால் எங்ஙன் மெய்த்தமிழ் மொழிக் கூறுபாடுகளை எடுத்து விளக்கஞ் செய்ய இயலும்?

இவர்களை விடுத்துக் கல்லூரிக்கண் கால்வைக்கும் அம் மாணவர்கள் அங்குள்ள தமிழ்ப் பேராசிரியர்களின் கைவலைக்குள்ளும் கருத்துப் புதர்க்குள்ளும் சிக்கிச் சீரழியும் இழிதகையை எங்ஙன் விண்டு விளக்குவோம்! தமிழ் என்னும் பெயரால் பாலியல் கலந்த பாடல் சுவைகளையும், பெண் நகை கூட்டும் நாடகவியல் கூறுகளையும், அரசியல், பொருளியல் விரகாண்மைகளையும் அவர்கள் விளக்குவதிலேயே தமிழ் வகுப்புகள் கழிந்து போகின்றன. அவர்கள் தமிழறியா மாணவர்களிடம் செய்யும் கோணல் மாணலான சொல்லாய்வுகளையும், இடக்கரடக்கரான மொழியாய்வுகளையும் எடுத்துக் கூறும் திறன் நமக்கெலாம் ஏது? அஃது அவர்களுக்கே கை வந்த கலைத் திறனன்றோ? "எங்களிடம் 'பேனாக்கள்' உண்டு; உங்களிடம் 'இங்க்' 'பாட்டல்'கள் 'பத்திரமாக' இருக்கின்றனவா?" என்றவாறு கல்லூரிப் பேராசிரியர் ஒருவர் தம் வகுப்பு மாணவிகளிடம் கேட்டதை, நம் காது புண்பட ஒருகால் கேட்க நேர்ந்தது. பத்தாண்டுகளுக்கு முன் நடந்த அக்கொடிய அருவருப்பான நிகழ்ச்சியை இன்னும் நம்மால் மறக்க முடியவில்லை. இக் கேள்வியைக் கேட்ட ஆசிரியர் புதுப் பாடல் எழுதும் பாவலரென மிகவும் பெயர் பெற்றவர்.

மேலும் கல்லூரிக்குத் தமிழ்ப் பேராசிரியராக வந்தவுடன், ஒருவர் தமிழில் செறிந்த புலமையுடையவராகவும், முழு அறிவாற்றலுடையவராகவும் தம்மை அளவிறப்பக் கருதிப் பெருமைப்பட்டுக் கொள்கிறார். பெரும்பாலும் தமிழில் முதுகலைப் பட்டம் பெற்றவரே இக்கால் கல்லூரிப் பேராசிரியராக வர முடியுமாகலின், செம்மையான தமிழறிவில்லாத பலரும், பணம் கொடுத்தோ, பரிந்துரை கொண்டோ, எளிதாகத் தமிழ்ப் பேராசிரியராக வந்துவிட முடிகிறது. நூற்றுக்கு இருபது இருபத்தைந்து பேர்களே முறையான தேர்வு முறைகளில் பேராசிரியப் பதவிக்கு வர முடிகிறது. இனி, தாம் விரும்பிய வகையில் பேராசிரியப் பதவிகளைப் பெற்ற அவ்வழியினர், தாம் வந்த

இரண்டு மூன்றாண்டுகளில் ஏதோ ஒரு தலைப்பின்கீழ் எவ்வெவ் வலைகயிலோ ஆராய்ச்சி இடுநூல்களை எழுதிக் காட்டிப் பண்டாரகர் (முனைவர்-டாக்டர்) பட்டங்களையும பெற்றுவிடுகின்றனர். இவற்றுக்கெல்லாம் பணப்புழக்கம் பெரிதும் உதவுகிறது.

ஆராய்ச்சி முனைவர் பட்டம் பெற்றுவிட்ட பேராசிரியர்க்குத் தலைகால் புரிவதில்லை. தாம் தமிழ்ப் பேராசிரியர் என்பதைக் கூட மறந்து தம் பெயருக்கு முன் 'டாக்டர்' என்கிற பட்டத்தையே போட்டுக் கொள்ள விரும்புவதும், அவர் தமிழில் அனைத்தும், அறிந்தவர் போல் நடிப்பதும், பிற துறைப் பேராசிரியர்களின் இயல்பான, தகுதி வாய்ந்த, அமைவான நடைமுறைக்கு முன் பெரிதும் அருவருப்படையவும் வருத்தம் கொள்ளவும் செய்கின்றன. வெறும் இலக்கியம் மட்டும் படித்த இவர் தம் அறிவாற்றலை இறப்ப மதித்து, வரலாற்றுப் பேராசிரியராகவும், இலக்கண முதுவராகவும், சொல்லாய்வு, மொழியாய்வுப் பேரறிஞராகவும் கருதிக் கொண்டு, அனைத்து அறிவுத்துறைகளிலும் வாய் வைத்து உலப்பத் தொடங்கிவிடுகிறார். அதன் பின்னர், மக்களுக்கு அறிவூட்டும் முயற்சியில் வெற்றிலக்கியக் கட்டுரைகளையும், கதைகளையும், வீண் ஆராய்ச்சிகளையும் எழுதி எழுதிப் பலவாறான பருத்த நூல்களை எழுதுவதும், சொற்பொழிவுகளுக்குப் போய்வருவதும், பட்டிமன்றங்கள் எனப் பெறும் வெட்டி மன்றங்கள் ஏறி விளாசுவதும், பாட்டரங்கங்கள் எனப் பெறும் கேட்டரங்கங்கள் ஏறி, உரைப்பாக்களைக் கூறி மக்கள் தலைகளை உருட்டச் செய்வதும், நாள் தோறும் நடந்து வரும் தமிழ்க் கூத்துகளாம். இவ்வாறாகத் தமிழ் வணிகம் செய்யும் இவர்கள் பேச்சிலும் எழுத்திலும் தமிழும் இராது; தமிழ்ப் பற்றும் இராது! இக் கொச்சை நடைக் கோமாளிகளும், கலப்பு நடைக் காலாடிகளும் செய்யும் தமிழ் வேடிக்கைகளையும் வாடிக்கைகளையும் பார்த்துப் பார்த்துப் பதைக்கும் உண்மைத் தமிழ் நெஞ்சங்களும், உயர் புலமைப் பேரறிஞர்களும் 'தமிழே! உனக்கும் இத்தாழ்ச்சி வந்துற்றதே' என்று அலமந்து, உலமந்து அரம் பொருதல் போல் துடிக்கும் தமிழ்மான உயிர்களும் ஆயிரம் ஆயிரமாக இல்லெனினும் நூறு நூறாக வேனும் இருப்பர் என்பதை எவரும் மறுத்துவிடல் இயலாது. மறந்து விடுதலும் கூடாது.

மறைந்த மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் மொழியியல் ஆய்வுக்குப் பின், அவ்வாய்வுக்குக் கற்றவர்களிடத்தும், மாணவர்களிடத்தும் ஒருவகை மதிப்புத் தோன்றிய பின், கல்லூரிப் பேராசிரியரில் சிலர், தாமும் மொழியாய்வு செய்வதாகச் சொல்லிக் கொள்வதும், ஏதாவது தமக்குத் தெரிந்த ஒரு சொல்லை எடுத்துக் கொண்டு, பகுதி, ஈறு பிரித்து, இதற்கு வேர் இது, இதன் பொருள் இது, என்று செப்படி வித்தையாட்டாளர் போலச் சொல்லாட்டம் ஆடும் வழக்கமும் படிப்படியாகத் தோன்றி வளர்ந்து வருகின்றன. இதில் அவர்களுக்குத் தலையும்

தெரிவதில்லை; வாலும் விளங்குவதில்லை. குருடர்கள் யானை கண்டது போல் மொழியறுவை, சொல்லறுவை செய்யும் அவர்களின் நகைச் சுவைக் கட்டுரைகளையும், சொற்பொழிவுகளையும் என்னென்று விரித்துரைப்பது? அதற்கொரு தனிக் கட்டுரையே எழுதினும் சாலும். இத்தகையோர் மொழிப்புலம் முற்றிய அறிஞர்கள் ஓரிருவரிடம் எங்கேனும் ஒருவகையில் சிக்கிக் கொண்டு, அவர்கள் இவர்களிடம் சில மொழியியல் கோட்பாடுகளை விரித்துரைக்கக் கேட்குங்கால், இவர்கள் பல்லை இளித்துப் பின் வாங்குவது கேட்கவும் பார்க்கவும் கழிவிரக்கத்தையே உண்டாக்குவனவாகும். மொழியியலில் செக்குக்கும், சிவக்குறிக்கும் வேறுபாடு தெரியாத இவர்களின் மொழியாய்வைக் கண்டு, சமசுக்கிருத அறிவு வாய்ந்த அறிஞர்கள் சிலர் எள்ளி நகையாடுவது, தமிழ்மொழிக்கே பேரிழுக்கும் பெருமைக் குறைவும் தருவதாகும். இவர்களை நினையுங்கால்,

கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற
வல்லதூஉம் ஐயம் தரும் (845)

உளரெனினும் இல்லாரொடு ஒப்பர் களன்அஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார் (730)

என்னும் திருவள்ளுவரின் திருவாய் மொழிகளே நினைவுக்கு வரும்.

மொழியாராய்ச்சியில் மொழி ஞாயிறு பாவாணரே, தம்மை மாணவ நிலையிலிருத்தியே அவையடக்கத்துடன் கூறியதை யாம் பலமுறையும் கேட்டு வியந்திருக்கின்றோம். இனி, அவரே அஞ்சிய மொழியியல் ஆய்வுத்துறையில் இத்தகையோர் ஒரு சிறிதும் அஞ்சாது உட்புகுந்து குட்டை குழப்புவது, இவர்களுக்கும் இருப்பதாக இவர்களே பெருமிதப்பட்டுக் கொள்ளும் இவர்களின் தமிழ்ப்பற்றையே குறைத்து மதிப்பிடுவதாக உள்ளதுதான் நமக்குப் பெரிய வருத்தத்தைத் தருவதாகும். (தொடரும்)

திருத்திப் படிக்கவும்!

இந்த இதழில் சில படிகளில் எதிர்பாராமல் ஓரிரு பக்கங்கள் பிழைதிருத்தம் பெறாமலேயே அச்சேறிவிட்டன. அதற்குப் பெரிதும் வருந்துகிறோம். அவற்றைப் படிக்குமுன் கீழ்வருமாறு திருத்திக் கொள்ளக் கேட்டுக் கொள்கிறோம்.

பக்கம்	இடம்	வரி	பிழை	திருத்தம்
28	மேலிருந்துகீழ்	13	துக்கம்	துயரம்
,,	கீழிருந்துமேல்	13	ஈகெள்	ஈகிகள்
,,	,,	14	இன்னமா	இன்னபிற
,,	,,	15	அந்தத்த	அந்தந்த
,,	,,	,,	மொருயில்	மொழியில்
29	மேலிருந்து கீழ்	10	ஒருமிப்பும்.	ஒருமிப்பும்
32	,,	2	தாங்கள்	தங்கள்
,,	,,	7	உளச்சலையும்	உளைச்சலையும்
,,	,,	9	இநநிலையில்	இந்நிலையில்
,,	கீழிருந்துமேல்	16	ஊதி	ஊர்தி

BHARATHANATYAM-A TAMIL DANCE

S. CHELLAPPA I.A.S,
Collector & District Magistrate
Hyderabad District-500 001.

Hyderabad
Dated: 7-6-1989.

Dear Sir,

I had an opportunity to visit the Art Sculptures in the temple of Lord Peruvudayar at Tanjavur, on 16-5-1989 dealing with Bharathanatyam dance. 81 postures of Bharathanatyam had been carved in this temple. The King Emperor had planned to depict 108 Bharathanatyam postures, but he could not complete this after carving up to 81 postures.

I have read in the Cambridge History of India and also in other authentic historical texts that Bharathanatyam is basically a Tamil dance. But unfortunately there is not a single Tamil word under these carvings. Of course, the King has not carved the titles of the postures in any language. But recently, the titles of postures are written in Devanagari and also in Tamil. I think this might have been written may be ten or fifteen years ago. I was also told that Smt. Padmaja Subrahmanyam has done some research work and also got a Ph. D. stating that Bharathanatyam is of North Indian origin, This needs further research.

I have also seen the Art sculptures relating to Bharathanatyam in the North. Only the Chandelas of Bundalkhand have depticted a few postures of Bharathanatyam in the Khajuraho temples. But compared to the dynasty of the imperial Chola's, the dynasty of Chandela's are of late origin. It can therefore be concluded that Bharathanatyam is from Tamil Nadu and the recently written titles of postures in Devanagari needs revision.

Since the Tamil University has been set up with the main idea of studying Tamil history, art, culture of the Tamil race, I request that steps may be taken to study the Bharathanatyam postures in the temple of Lord Peruvudayar at Tanjavur and give suitable Tamil titles to the various postures. The various commentaries on Cilapadikaram will throw much light on this aspect

Yours sincerely,
S. Chellappa I.A.S.

To
Sri. Vice Chancellor, Tamil University.
Copy to. Poet Perunchithiranar, Thenmozhi, Madras-5.

Scanned with CamScanner

(முன்பக்க மடலின் தமிழ்ப் பெயர்ப்பு)—

அன்புள்ள ஐயா,

தஞ்சாவூர் பெருவுடையார் கோவிலிலுள்ள பரத நாட்டியத் தொடர்பான கலைச்சிற்பங்களைப் பார்வையிடுகின்ற ஒரு வாய்ப்பைக்கடந்த 16-5-89 அன்று நான் பெற்றேன். அக் கோயிலில் பரத நாட்டியத்தில் எண்பத்தியொரு கலைத்தோற்றங்களை செதுக்கி இருக்கிறார்கள். சோழப் பேரரசர் பரத நாட்டியத்தின் நூற்றுஎட்டுப் பாவனைகளைச் செதுக்குவதற்காகத் திட்டமிட்டு இருந்திருக்கிறார். ஆனால், அவர் எண்பத்தொரு பாவனைகளை மட்டுமே செதுக்கச் செய்து பிறவற்றை முழுமை செய்ய முடியாமல் போயிருக்கிறார்.

நான் ''கேம்பிரிட்ஜ்'' பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள இந்திய வரலாற்று நூலிலும், பிற அதிகார முழுமையான வரலாற்று நூல்களிலும், பரத நாட்டியம் தமிழ் ஆடற்கலையின் அடிப்படையில் அமைந்தது என்பதைப் படித்திருக்கிறேன். ஆனால் நற்பேறின்மைக் காரணமாக இச் சிற்ப வடிவங்களின் கீழ் ஒரு தமிழ்ச் சொல்லும் இல்லை. சோழப் பேரரசர் இக் கலைச் சிற்பங்களின் கீழ் எந்த மொழியிலும் விளக்கங்களைப் பொறிக்கச் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால், அண்மையில் இவற்றின் கீழ் தேவநாகரியிலும், தமிழிலும் விளக்கங்கள் எழுதப்பட்டுள்ளன. இவை ஒரு பத்து, பதினைந்து ஆண்டுகளுக்கு முன் எழுதப் பெற்றிருக்கலாம் என்று நான் கருதுகிறேன். அத்துடன் திருவாட்டி. பத்மா சுப்ரமணியம் என்பவர் பரத நாட்டியக்கலை வட இந்தியாவைத் தோற்ற மூலமாக கொண்டது என்பது பற்றிச் சில ஆராய்ச்சிகளைச் செய்ததாகவும் அதன் வழி அவர் முனைவர் (டாக்டர்) பட்டம்கூட பெற்றுள்ளதாகவும் நான் கேள்விப் பட்டேன். இது மேலும் ஆராய்ச்சிக்குரியது.

வடநாட்டுப் பகுதியில் பரத நாட்டியத் தொடர்பான கலைச் சிற்பங்களை நான்கூட பார்த்திருக்கிறேன். பண்டல்கண்டு சந்தலர்கள் மட்டுமே பரத நாட்டியத்தின் சில கற்சிற்பங்களை 'கசுரகோ' (Khaju Raho) கோயில்களில் செதுக்கியிருக்கிறார்கள். ஆனால் சோழப் பேரரசின் வழிமுறையுடன் ஒப்பிடும்போது சந்தலர்களின் வழிமுறை மிகவும் பிற்காலத்தது. ஆகையால் பரத நாட்டியம் தமிழ் நாட்டில் இருந்து பிறந்தது என்பதால் மிக அண்மையில் தஞ்சைப் பெரிய கோயில் நாட்டியச் சிற்பங்களில் பொறிக்கப்பட்டுள்ள 'தேவநாகரி' தலைப்பு விளக்கங்கள் மாற்றத் தகுந்தவை என்னும் முடிவுக்கு வரவேண்டியுள்ளது. எனவே, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழர்களுடைய வரலாறு, கலை, பண்பாடு, மரபு நிலைகள் ஆகியவற்றை ஆராய்ந்து உறுதி செய்கின்ற கருத்துக் கொண்டிருப்பதால் தஞ்சாவூர் பெருவுடையார் கோயிலிலுள்ள பரத நாட்டியச் சிற்பங்களின் விளக்க வாசகங்களை ஆராயவேண்டும் என்றும், அவற்றுக்குப் பொருத்தமான தமிழ்த் தலைப்புகளை அவற்றின் கீழ்ப் பொறிக்கவேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இம் முயற்சியில் சிலப்பதிகாரத்தில் உள்ள பலவகையான (பரத நாட்டியக்) குறிப்புகள் மிகுந்த ஒளி பெறலாம். தங்கள். உண்மையுள்ள, —எசு. செல்லப்பா.

பெறுநர்:—துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சை.

தென்மொழி இல்லத் திருமணம்

நடைபெறும் தி பி. 2020, நளித்திங்கள் 11 (26-11-89)-ஆம் பக்கல் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 11·30 மணி யளவில், சென்னை-14, இராயப்பேட்டை, திரு.வி.க. நெடுஞ்சாலை 244-ஆம் எண்ணிலுள்ள சுவாகத்துவிடுதி (Hotel Swagath) அரங்கில், .

தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்களின் ஆசிரியரும், உலகத் தமிழின முன்னேற்றக் கழக முதல்வரும் ஆகிய பாவலரேறு பெருஞ்சித்திரனார்—தாமரையம்மை இணையரின், இளைய மகள் செல்வி பிறைநுதலுக்கும்,

சம்புவராயர் மாவட்டம், முனுகப்பட்டு திரு. தி. கிருட்டிண சாமி—காமாட்சியம்மாள் இணையரின் மகன் செல்வன் குணத் தொகையன் க.மு.வுக்கும்.

தமிழினவியல் அறிஞர். பறம்பை அறிவனார் அவர்களின் தகுதி சான்ற தலைமையில், மங்கல நாண் அணியாத தமிழ் மரபு வழித் திருமணம், நிறைந்த சான்றோர்கள், பெரியோர்கள், இனநலப் பேராளர்கள், தமிழ்ப் பேரறிஞர்கள், தமிழ்த் தாய்மார்கள் ஆகியோர் முன்னர் இனிதே நடைபெற்றது.

தலைவரின் முன்னுரை சான்ற திருமண நிகழ்விற்குப் பின்னர் உயர்திருவாளர்கள், செம்புலவர் இறைக்குருவனார், தென்மொழி ப. முருகவேள், வழக்குரைஞர் சுடரொளி என்கிற சோதிப்பிரகாசம், திருமாறன், தமிழநம்பி, விழுப்பரையன், சின்னத்துரை, மு. காளிமுத்து, அ. மதிவாணன், திருவாட்டி ஆண்டாள் திருமாறன், சித்தார்த்தன், பேரா. இல. க. இரத்தினவேல், பொற்செழியன், அரணமுறுவல், பாவலர் இளஞ்சித்திரன், சொல்லாய்வறிஞர் ப. அருளி ஆகியோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர்.

தொடக்கத்தில், திருவாட்டி இறை. பொற்கொடி தமிழ் வாழ்த்துப் பாடினார். தலைவரை அமர்த்தம் செய்து மா, பூங்குன்றன். க. மு. அவர்களும், வரவேற்புரையைப் பாவலர் வளங்கொண்டான் அவர்களும் நிகழ்த்தினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் இருவீட்டார் சார்பிலும் மண விழாவிற்கு வந்திருந்தார் அனைவர்க்கும் நன்றி கூறினார். 12 மணி யளவில் நிகழ்ந்த இன்சுவை விருந்துக்குப் பின்னர் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. ○

"தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

ஆண்டுக் கட்டணம்	:	உருபா	24.00
அரையாண்டுக் கட்டணம்	:	,,	12.00
தனியிதழ்	:	,,	2.00

Scanned with CamScanner

பெரியார் செய்த பெருந்தொண்டின் நோக்கம் நிறைவேற வேண்டும்!

அதுதான் அவர்க்கு நாம் செய்யும் நன்றி! அவர்க்கு நாம் தரும் பெருமை!

திருவள்ளுவருக்குப் பின் தந்தை பெரியாரைத் தவிர வேறு எவரையும் நம்மால் முழு அறிஞராக—முழுத் தலைவராக ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

ஓர் அறிஞர் பொதுமக்களுக்காக—அவர்களின் முழு நலன்களுக்காகவே தம் அறிவையும், அதனால் வெளிப்படும் சிந்தனைகளையும், அவற்றின் அடிப்படையில் அமைந்த செயற்பாடுகளையும், முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். மற்றபடி, அந்த அறிவு அவ்வறிஞர்க்கே பயன்படுமானால் (அஃதாவது அந்த அறிவைக் கொண்டு, எழுத்தாகவோ சொல்லாகவோ கருத்துகளாகவோ வெளிப்படுத்தி, அவற்றை விற்ற வருவாயைக் கொண்டு, அவரும் அவரைச் சார்ந்தவர்கள் மட்டுமே பயன் பெறுவார்களானால்) அவ்வறிவால் பெருமைப்படுவதற்கு ஒன்றுமேயில்லை. அறிவின் பயனே, அஃது எந்த அளவுக்குப் பிறர்க்குப் பயன்படுகிறது என்பதைப் பொறுத்ததுதான்.

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்.

—என்பது திருக்குறள்.

கூர்த்த அறிவு கூரிய கத்தியைப் போன்றது. கத்தி மிகவும் கூர்மையாக உள்ளது என்பதற்காகவே, அதை யாரும் மதிப்பதில்லை; அது பயன்படும் வகையாலேயே அது மதிப்புப்பெறும்.

மேற்சொன்ன திருக்குறளில் மக்கட் பண்பு என்பது மக்கள் நலனுக்குப் பயன்படும் உணர்வு என்று பொருள்படும். மக்கள் நலத்துக்கென்று தம் அறிவைப் பயன்படுத்தாத எந்த அறிஞரும் அறிஞர் ஆகார்; அவர் வெறும் மரத்தைப் போன்றவரே!

ஒருவர், அறிவு விளையும் களமாக இருக்கலாம். ஆனால், ஒரு நிலத்தில் விளைந்த விளைவு எவ்வாறு மக்களுக்குப் பயன்பட வேண்டுமோ, அவ்வாறு ஓர் அறிவுக் களமாகிய ஓர் அறிஞரிடம் விளைந்த அறிவு, மற்றவர்களுக்குப் பயன்பட வேண்டும்; இதுவே இயற்கையின் கோட்பாடு. இக்கோட்பாட்டிற்கு மாறாக இயங்குபவர் அறிஞராயினும் அவர் வறிஞரே! வெறுமையானவரே!

ஒரு பொதுநிலைச் சிந்தனையாளர், அறிஞர், தனிநிலை வாழ்க்கையரேனும், அத் தனிநிலைச் சிந்தனைகளும், செயற்பாடுகளும் கூட, பொதுநிலைக்கே பெரும்பாலும் பயன்படுவதால், அவர் தந்நலம் துறந்தவர் என்றே மதிப்பிடப் பெறுவார்; அவ்வாறில்லாமல், அப்பொதுநிலைச் சிந்தனையாளர், தம் அறிவு வெளிப்பாட்டைப் பிறர் நலனுக்காகப் பயன்படுத்துவது போல் தோற்றம்காட்டி, மறைமுகமாக, அதனைத் தம் தனிநிலை

வளர்ச்சிக்காகவே பயன்படுத்துவாராயின், அவர் முழுக்க தந்நலத்தவரே ஆவர்.

தம் முழுமையான அறிவு வெளிப்பாட்டையும் அதன் அடியூன்றிய செயற்பாடுகளையும் பொதுமக்களுக்காகவே பயன்படுத்தும் ஒரு பேராளர், தம் தந்நலம்—தனிநலம்—கருதி எதையேனும் செய்துகொள்வாரயினும், அதுவும் பொதுநலம் கருதிய செயலாகவே கருதப் பெறும்.

இவ் வியற்கை இலக்கணத்திற்கு, ஒட்டுமொத்த — தமிழினத்தின், கடந்த இரண்டாயிரம் ஆண்டுக் கால எல்லையில், பூதக் கண்ணுடி வைத்துப் பார்த்தாலும், தந்தை பெரியாரைப் போலும் பேரறிஞர் ஒருவரை, முழுக்க முழுக்கப் பொதுநலம் நாடிய ஒரு செயலாளரை—நம்மால் காண முடியவில்லை. இது வெறும் பெருமைக் கூற்று அன்று; அறிவு அடிப்படையில் ஆய்ந்து கண்ட முற்ற முடிந்த முடிவு.

வெறும் சிந்தனையால்—அறிவால்—மட்டுமே ஒருவர் பெரியாராகி விட முடியாது. சிந்தனை—அறிவு—இவற்றின் அடிப்படையில் அமைந்த செயல் ஆகிய தொடர்ச்சியான இம் மூன்றின் வழியாகவும், தம் வாணாளை முழுமையாகச் செலவிட்ட மூவுரனுளரே பெரியார் என்று மதிக்கப் பெறுவார். அவ்வாறு செயற்கரிய எண்ணிச், செயற்கரிய சொல்லிச் செயற்கரிய செய்த அந்தணுளர் பெரியார் ஒருவரே! இன்னுஞ் சொன்னுல் 'செயற்கரிய செய்வார் பெரியர்' என்று திருவள்ளுவர் வகுத்துச் சொன்ன இலக்கணத்துக்குப் பொருந்தக் கூடியவரும் இவர் ஒருவரே!

(மூவரனுளர் என்பது மூன்று உரனுடையவர் என்று பொருள் தரும் ஒரு சொல். அறிவு உரன், நெஞ்சு உரன்,செயல் உரன் ஆகிய மூன்று உரன்களே மூவுரன். இந்த மூவுரன் என்னும் சொல்லே முவ்வுரன், முவ்வுரம், என்று ஆகி மும்முரம் என்று திரிந்தது. ஒன்றின் செயல் முடுக்கமே முவ்வுரம் (மும்முரம்) ஆகும். செயல் முடுக்கமாக இயங்கும் ஒருவரை முவ்வுரமாக (மும்முரமாக)ச் செயல்படுகிறுர் என்பது வழக்கு.)

உரம்—உறுதி: சிந்தனையில் உறுதி; சொல்லில் உறுதி; செயலில் உறுதி; இம் மூன்றும் அமைந்த கொள்கையில் உறுதி. இவ்வுறுதி, கடந்த கால வரலாற்றில் பெரியாருக்கிருந்ததைப் போல் வேறு எந்த அறிஞர்க்கும் இருந்ததாக நம்மால் காண முடியவில்லை.

ஒருவர்க்குச் சிறந்த சிந்தனை இருக்கலாம்; அறிவு இருக்கலாம்; செயல் இருக்கலாம்; இம் மூன்றும் ஒருங்கிணைந்த கொள்கையும் இருக்கலாம். ஆனுல் அவற்றில் உறுதி—உரன்—இருக்கும் என்று சொல்ல முடியாது. இனி, அவ்வாறிருப்பினும், அவ்வுறுதி—உரன்—காலத்தால், இடத்தால், பிறர் சொல், செயல் தாக்கங்களால், பொருளால், பதவியால், ஆள்கள் பிறரால் விளர்ச்சி (தளர்ச்சி) துளியும் தோன்றுமல் நிலைத்திருக்கும் என்று கூற வியலாது. இனி, அஃதவ்வாறு நிலைத்திருப்பினும், அத்-

Scanned with CamScanner

தகைய ஒருவர் அவ்வுறுதிப்பாட்டுடன் கூடிய உழைப்பை—முழுவதும்—தம் இறுதிநாள் வரை, பொதுமக்கள் நலனுக்கே பயன்படுத்துவார் என்றும் கூறவே ஒன்றுது;

கருமம் செய ஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையில் பீடுடைய தில்.

—திருவள்ளுவர் கூறிய இப் பெருமைக்குரிய பீடு இலக்கணத்தில், ஓர் இம்மியும் பிசகாமல், இறுதிவரை உறுதியுடன், தம் கொள்கை வழி நின்று உழைத்தவர் பெரியார் ஒருவரே! இவர்க்கு முன்னேரும், இவர் காலத்தோரும், தாம் கொண்ட கொள்கைகளை, ஏதாவதொன்றிற்கு இடை மாறிய தளர்வாளர்களாகவே இருப்பதை வரலாறு காட்டும்.

இவ்வாறு, பெரியாரைப் பெரியாராக நம்மை மதிக்க வைக்கின்ற அவரிடத்திருந்த தன்மைகளைப் பின் வருமாறு வரிசைப் படுத்தலாம்.

தந்தை பெரியார் அவர்களிடம் இருந்தவை:

1. தவறிலாத தனிநிலைச் சிந்தனை.
2. அதனை அளாவி நிற்கின்ற மக்களியல் மெய்யறிவு;
3. அவ்வறிவை வெளிப்படுத்துகின்ற — கள்ளம் கவடற்ற — சூழ்ச்சி கலவாத — புனைவு இல்லாத — ஆரவாரமில்லாத— உண்மையான — வலிவான சொற்கள்;
4. இவற்றின் அடிப்படையிலமைத்துக் கொண்ட தம் கலப்பற்ற தூய சிந்தனைக்குச் சரி என்று ஒப்பிய — மக்கள் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்ட வலிவான கொள்கை.
5. அக் கொள்கைக்கெனவே இரவு, பகல் பாராது, பனி, மழை, வெயில் கருதாமல், பதவி, தம் தனிநலம் நாடாமல் உழைத்த — உடலையே ஓடாகத் தேய்த்த — அரும் பெரும் உழைப்பு!
6. அவ் வுழைப்பால் வந்து சேர்ந்த ஈட்டம் யாவையும் மக்கள் நலனுக்கென்றே விட்டுவிட்டுச் சென்ற பரந்த — பொருள் பொதிந்த — பொதுமை நலம்.

— இவ் வாறு தன்மைகளும் பெரியாரைப் போல் வரலாற்றில் வேறு யாரிடமாகிலும் அமைந்திருந்தன என்பதை எவரேனும் குறிப்பிட இயலுமா?

இனி, மேற்கண்ட, பெரியாரிடமிருந்த தனிநிலைக் கூறுகள் ஆறையும் ஒருவாறு சிறிது விளங்கக் காட்டுவோம்.

1. தவறிலாத தனிநிலைச் சிந்தனை:

சிந்தனையில்லாதவன் மாந்தனே அல்லன். இனி, சிந்திப்பவனில் தவறில்லாமல் சிந்திப்பவன் தனிச் சிறப்புடையவன்.

தன் சிந்தனையிலும், பிறர் எவருடைய சிந்தனை வழியிலும் தன் சிந்தனையைக் கலந்தோ, பின்பற்றுதலாகவோ, தழுவிக் கொண்டதாகவோ இல்லாமல், தன் தனிநிலை அறிவு என்ன

கருதுகிறதோ, அதையே, கால, இட, மக்கள் கூட்டத்திற்கு ஏற்ற வகையில் சிந்திக்கின்ற தனித்தன்மையைக் கொண்டதே பெரியாரின் சிந்தனையாகும்.

இச் சிந்தனை பிறர்க்குத் தவருகவும் படலாம்; சரியில்லாததாகவும் படலாம். ஆனுல் அதற்காகத் தமக்குச் சரி என்று பட்டதைப் பிறருக்காகத் தவறு என்று ஒப்புக் கொள்ளாத தனிச் சிந்தனை பெரியாருடையதாகும்.

இப்படிச் சிந்திக்கிறவர்கள் மிகவும் குறைவு. ஆனுல், அவர்கள்-தாம் தம்மை மக்களுக்குத் தனியாக அடையாளங்காட்டிக் கொண்டவர்களாகும். பிறர் சிந்தனை முடிவுகளெல்லாம் மற்றவர்களின் சிந்தனைக் கலப்புகளே ஆகும். அவையெல்லாம் பொது மகள் ஒருத்தி பெற்ற குழந்தையைப் போல மூல அடையாளம் காணுத வழுக்கோலங்களே!

இவ் வகையில், தமிழகத்தின் மாந்தவியல் வரலாற்றில், பெரியார் தனித்து நிற்கின்முர்.

2. அதனை அளாவி நிற்கின்ற மக்களியல் மெய்யறிவு:

பெரியாரின் தனிநிலைச் சிந்தனையை அளாவி (தழுவி) நிற்கின்ற மக்கள் மனவியல், நலவியல், வாழ்வியல், உரிமையியல்—முதலிய மீமிசைத் தன்மைகளை வளர்த்தெடுக்கும் முறையில், அவர் வெளிப்படுத்திய அறிவியல், பகுத்தறிவியல், மெய்யறிவியல் கருத்துகள்.

இவற்றைப் பெரியாரை 'விட அவர்க்கு முந்தி வாழ்ந்த வேருெரு சிந்தனையாளர், தமிழக மக்கள் இனத்தை அடிப்படையாகக் கொண்டு வெளிப்படுத்தியதில்லை என்க.

இவரன்றி, இவர்க்கு முற்பட்டார் பலரும் கற்பனையியல், மதவியல், கதையியல், சமய அறவியல், அடிமையியல், முதலாளியவியல், தெய்வயியல் கருத்துகளையே பொதுமை மாந்த நலம் கருதாமல், தப்பும் தவறுமாக, ஆங்காங்கே தம் தம் நூல்களுள் வெளிப்படுத்தியுள்ளனர் என்று அறிக.

இவற்றுக்கு நெறிவிலக்காகத் திருக்குறளைக் கூறலாமெனினும், அதிலும் மாந்த நேர்நோக்கில்லாத சில கற்பனைகளும், கருத்துப் பிழைகளும் விரவியுள்ளன என்க. இதனை எம் 'திருக்குறள் மெய்ப்பொருளுரை'யின் கண் விரிவாகவும் விளக்கமாகவும் கண்டு கொள்க.

எனவே இவ்வறிவு நிலையிலும் பெரியாரின் தனித்தன்மை புலப்பட்டுள்ளதாம் என்க.

3. அவ் வறிவை வெளிப்படுத்துகின்ற - கள்ளம், கவடற்ற, சூழ்ச்சி கலவாத - புனைவு இல்லாத-ஆரவாரமில்லாத-உண்மையான-வலிவான சொற்கள்:

இங்கு,

கள்ளம் என்பது, உள்ளத்தை மறைத்தல்;

கவடு என்பது, உள்ளத்தைப் பிழைத்தல்;

சூழ்ச்சி என்பது, அறிவால் ஆராய்ந்து, இதை வெளிப்படுத்தினல் தமக்கு வரும் நன்மையும், நன்மையல்லாத தன்மையும், தீமையும் அளவிட்டு, இறுதியிரண்டையும் நீக்கி, நன்மையே கிடைக்குமாறு, காலம், இடம், ஆள் - இவற்றை நோக்கிக் கருத்தை வெளிப்படுத்தும் அறிவின்பாற் பட்ட ஓர் ஆய்வு உணர்வு.

புனைவு என்பது, கேட்பார் மகிழும்படியும் கேளார் விரும்பும்படியும், கருத்தளவானே யன்றிச் சொல்லளவானே சுவடித்து (ஜோடனை செய்து) வெளிப்படுத்தும் ஆரவாரச் சொல்லமைப்புகள்.

ஆரவாரம் என்பது, ஆர்ப்பரிப்பு, எழுச்சி, சிதறல், சிந்தல், பயன் நோக்காத வெற்றுணர்வுகள் தழுவிய சொல் மலைவுகள்! (டாம்பீகச் சொற்கள், செயல்கள் முதலியன.)

உண்மை என்பது, உள்ளத்தில் தோன்றிய உணர்வு அதன் தோற்றம், வடிவம், அழுத்தம் ஆகியவற்றுள், எவ்வகைத் திரிபும் சிதைவும் இன்றி, அவ்வாறே சொல்லிலும் செயலிலும் வடிந்தொழுகும் சொல்லமைப்பும் செயல் அமைப்பும்;

வலிவு என்பது சொல்லில் உள்ள கருத்தாற்றல்!

பெரியாரின் சொற்கள், தம் அருமை, பெருமை, ஆற்றல், அகங்கார நோக்கின்றி, மக்கள் நலனும், முன்னேற்றமும், மான உரிமை வளர்ச்சிகளும் கருதிக் கூறப் பெற்றனவாகையால்; அவை நேரே மக்கள் தம் உள்ளங்களைப் போய்த் தொடுவன ஆயின;

புலமைக்குப் புலமை கூறும் புலச்சொற்களாக அவை இல்லாமல், எளிமைக்கு எளிமை கூறும் எளிமைச் சொற்களாக அவை இருத்தலின், எல்லா மக்களாலும் அவரின் சொற்கள் நன்கு விளங்கிச் செரித்துக் கொள்ளும்படி, பயன் பெற்றன என்க.

இந்நிலையிலும் பெரியாரின் தனித்தன்மை சிறப்புப் பொருந்தியதாம் என்க.

4. இவற்றின் அடிப்படையிலமைத்துக் கொண்ட தம் கலப்பற்ற தூய சிந்தனைக்குச் சரியென்று ஒப்பிய, மக்கள் முன்னேற்றத்தையே நோக்கமாகக் கொண்ட வலிவான கொள்கை:

சிந்தனையில்லாத எந்தக் கருத்தையும் அவர் சிந்தியதில்லை;

தம் அறிவுக்குச் சரி என்று படாத எந்தக் கருத்தும் அவர் வாயினின்று சரிந்ததில்லை.

தாம் ஒப்பாத—கடைப் பிடிக்காத—எந்தக் கொள்கையையும் அவர் மக்களுக்கிடையில் பரப்பியதில்லை. அவரின் ஆசிரியப் பேச்சை அவரே முதல் மாணவனாக இருந்து கேட்டு ஏற்றுக் கடைப் பிடித்தார். எனவே அவர் ஏற்றுக் கொண்டு வெளிப்படுத்திய கொள்கைக்கு அவரே முதல் ஆசானும், முதல் மாணவனும் ஆவார்.

இவ்வாறு தாம் வெளிப்படுத்திய கருத்தைத் தாமே கடைப் பிடித்து ஒழுகுகிறவர்கள் உலகில் மிகச் சிலரே.

ஓதி உணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்
பேதையிற் பேதையார் இல்.

—என்னும் திருவள்ளுவப் பேராசான் காட்டிய பேதைமையைத் தகர்த்தெறிந்தமேதைமை அவருடையது.

அவரே கடைப்பிடித்தொழுகியதால், அவரின் கொள்கை வலிவு பெற்றது.

இதிலும் அவரின் தன்மை தனித்திறன் கொண்டதாகும். (அவர் கொள்கை சிலர் பிறர்க்கு ஒப்புதல் இல்லாமல் இருப்பது வேறு; அ்து இங்கு ஆராயத்தக்கது அன்று.)

5. அக் கொள்கைக் கெனவே இரவு, பகல் பாராது, பனி, மழை, வெயில் கருதாமல், பதவி, நலம் நாடாமல் உழைத்த- உடலையே ஓடாகத் தேய்த்த அரும் பெரும் உழைப்பு:

இடும்பைக்கே கொள்கலன் கொல்லோ குடும்பத்தைக்
குற்றம் மறைப்பான் உடம்பு.

—என்பது திருக்குறள்.

பொதுத் தொண்டிற்குத் தம்மை ஒப்படைத்துக் கொண்ட-வர் தம் நலன் துளியும் கருதாமல், எந்நேரமும் மக்கள் நலனையே கருத்தில் கொண்டு உழைக்க வேண்டுமாதலால், அவர் உடல் நலிவு கொள்ளுதலும் நோய்வாய்ப் படுதலும் இயல்பு. இதனைக் கருத்தில் கொண்டே இனத்திற்கும் நாட்டிற்கும் நேர்ந்த கேடு-களைப் போக்க விரும்புபவரின்—உழைக்கின்றவர்களின் —உடம்பு அனைத்துத் துன்பங்களுக்கும், நோய்களுக்கும் கொள்கலனாக அமையும் என்னும் திருவள்ளுவரின் கருதற்பாட்டுக்கு ஏற்ப, தந்தை பெரியார் தம் இறுதி நாள் வரை பல நோய்களுக்கும் இலக்காகிய உடலைச் சுமந்து கொண்டே இயங்கியது, இதற்கு முன் வேறு எந்தப் பொதுத் தொண்டரிடமோ தலைவரிடமோ காணாத உழைப்பு ஆகும்.

அறிவியல், மருத்துவவியல் ஆகிய உடல் நலத்துறை பெரி-தும் முன்னேறிய நிலையிலேயே, பழுது தீர்க்க வியலாமல் அவர் நோய்ப்பட்ட உடலையும் சுமந்து சென்று, தாம் மேற் கொண்ட அரும்பெருந் தொண்டைச் செய்து கொண்டிருந்தா ரென்றால், அவர் உழைப்பை என் சொல்வது?

இதிலும் நம் பெரியார்க்கு நிகர் பெரியார்தாம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

6. அவ்வுழைப்பால் வந்து சேர்ந்த ஈட்டம் யாவையும் மக்கள் நலனுக் கென்றே விட்டுவிட்டுச் சென்ற, பரந்த, பொருள் பொதிந்த பொதுமை நலம்:

தமிழகத்தில், இதுவரை எந்தப் பொதுத்தொண்டரோ,

Scanned with CamScanner

தலைவரேதாம் தம் பொதுவுழைப்பால் பெற்ற ஈட்டத்தை மக்கள் பொதுநலனுக்கே உரிமையாக்கிப் போயினர் என்னும் வரலாற்றைக் காண இயலாது.

தந்தை பெரியார் அவர்கள்தாம் தம் உழைப்பின் பொழுது, தம் உழைப்பை மேம்படுத்தும் வகையில், பொதுமக்கள் தம்பால் கொடுத்த பல இலக்கக்கணக்கான உருபா மதிப்புள்ள சொத்து-களைத் தம் பொதுத் தொண்டு நிறுவனத்திற்கே உரிமையாக்கி விட்டுச் சென்றுள்ளார்.

இது, பொதுத் தொண்டு செய்பவர்க்கே ஓர் எடுத்துக் காட்டாய்—ஓர் இலக்கணமாய்—விளங்கும் அரிய செயலாகும்.

திருவள்ளுவர் கூறிய, பேரறிவாளர், நலனுடையார், பெருந் தகையார்—ஆகியோர்க்கு உரிய செல்வத்துப் பயன்போல் பெரியாரிடம் கிடைத்த செல்வம் பொதுமக்கட்குப் பயன்தர வேண்டி, அதனைப் பொதுத் தொண்டுக்கு வைத்த எய்ப்பில் வைப்பாகக் கருதும்படி செய்தார்.

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.
பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்.
மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.

—என்னும் மூன்று குறள்களுக்கும் இலக்கியமாகச் செய்தார், பெரியார் என்னும் பெருந்தகையாளர், தம் செல்வத்தை, எனின் அது மிகையான கூற்றாக இருத்தல் இயலாது.

அவர் எண்ணியது ஈடேறியதா, இல்லையா என்பது வேறு: அ'து அவர்க்குப் பின் வந்தவர்களின் செயற்பிழை! அதற்காகப் பெரியாரின் நோக்கத்திலும் செயலினும் நாம் பிழைகாணல் இல்லாதன்றோ? இதுவும் அவரின் தனிச்சிறப்பாகும்.

இனி, இறுதியாக, இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய பேருழைப்பாளர் தந்தை பெரியாரின் பெருந்தொண்டின் நோக்கம் — சுருக்கமாகச் சொல்ல வேண்டுமெனில், தமிழன் ஒவ்-வொருவனும் தன்மானத்துடனும், தன்னுரிமையுடனும், தன்னாட்சியுடனும் வாழ வேண்டும் என்பதே! இந்தநோக்கத்திற்-காகத்தான் அவர் உழைத்தார்; பெருஞ்சுமை தாங்கினார்; பெருந் துயர் உற்றார். அந்த நோக்கத்தை நாம் நம் நோக்கமாகக் கொண்டு உழைப்பதும், அது நிறைவேறச் செய்வதும்தாம் அவர்க்கு நாம் காட்டும் நன்றி! அவர்க்கு நாம் தரும் பெருமை!

வீறு கொள்க தமிழினம்
வெல்க பெரியார்தம் நோக்கம்!

(சிந்தனையாளன் வெளியிட்ட 'பெரியாரின் 111-ஆவது பிறந்தநாள் மலரில்' வெளிவந்த ஆசிரியரின் கட்டுரை.)

முன்னிதழ்த் தொடர்ச்சி

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் !

மொழி வளர்ச்சிக்கும் கணிப்பொறி மிகச் சிறந்த கருவியாக மேலை நாடுகளில் பயன்பட்டு வருகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கணிப் பொறி அறிவியல் துறை ஒன்று அமைக்கப்பட்டுத் தமிழிலிருந்து ஆங்கிலம், இந்தி, மராட்டி, தெலுங்கு, கன்னடம், மலையாளம், குசராத்தி ஆகிய மொழிகளுக்கு இயந்திரச் சொற் பெயர்ப்பு செய்யும் முறை வெற்றியுடன் முடிக்கப் பெற்றுள்ளது. இதனைத் தொடர்ந்து மொழி பெயர்ப்புக்குரிய நுட்பங்கள் தொடர்ந்து ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

உலகெங்கிலும் உள்ள ஓலைச் சுவடிகளின் அட்டவணை ஒன்று கணிப்பொறி வழி பட்டியலிடப்பட்டுப் பதிப்பிக்கும் நிலையில் உள்ளது.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் பல்வேறு துறைகளுக்கும் தேவைப்படும் தரவுகளைத் திரட்டியும் பதிவு செய்தும் வகைப் படுத்தியும் வழங்கும் பணியும் இங்கு நடைபெறுகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆண்டுதோறும் பல்வேறு கருத் தரங்குகளை மாநில அளவிலும், அனைத்திந்திய அளவிலும், பன்னாட்டு அளவிலும் நடத்தி வருகிறது. இத்தகைய கருத்தரங்குகள் பிற மாநில மக்களோடும் பிற நாட்டு அறிஞர்களுடனும் ஆய்வுக் கருத்துகளைப் பரிமாறிக் கொள்ளும் களங்களாகத் திகழ்ந்து வருகின்றன.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் தனித்தன்மை பெற்ற துறைகளான நாடகத் துறை, ஓலைச்சுவடித் துறை, கணிப்பொறி அறிவியல் துறை போன்ற துறைகள் பணிப்பட்டறைகளும் பயிற்சி வகுப்புகளும் நடத்தி வருகின்றன.

அயல் நாட்டுத் தமிழர்களுக்குத் தமிழ்க்கல்வி பயிற்று-வித்தலும், அவர்களுக்கான பண்பாட்டுப் பயிற்சி வகுப்பும், தமிழறியா அயல் நாட்டவர்க்குத் தமிழ் கற்பித்தலும் அயல் நாட்டுத் தமிழ்க் கல்வித் துறையால் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளாகும்.

இந்திய மொழிகள் நடுவம் என்ற புதிய துறை பிற மாநில இ.ஆ.து. (I.A.S.) இ.கா.து. (I.P.S.), அலுவலர்களுக்-கும் தமிழ் கற்பிக்கும் பயிற்சி வகுப்புகளை நடத்துகிறது.

தமிழ்ப் பல்கலைக் கழகம் ஓர் உயராய்வு நடுவம். ஆனால், அது நிறுவப்பட்ட தஞ்சையைச் சுற்றி வாழும் மக்களுக்கு அதனால் என்ன பயன் தர முடியும்? இன்னும் எழுத்தறிவே பெறாத தற் குறிகள் நிலையை உயர்த்துவது என்னும் சிந்தனையில் தோன்றி-யதுதான் குறுகிய கால அகவை வந்தோர் கல்வித் திட்டம்.

இந்தியாவிலேயே முதன் முறையாக மூன்று மாத காலத் தில் எழுத்தறிவைப் புகட்ட முடியும் என்பதைத் தமிழ்ப்

Scanned with CamScanner

பல்கலைக் கழகத்தின் புதிய அணுகுமுறை உறுதிப்படுத்தியுள்ளது. பல்கலைக் கழக நல்கைக் குழுவின் பொருள் உதவியோடு தொடங் கப்பட்ட இத்திட்டத்தால் இதுவரை ஏழாயிரம் படிப்பறிவில்லா மக்கள் பயன் பெற்றுள்ளனர்.

இந்திய அரசின் மாந்தவள மேம்பாட்டுத் துறையும் மாநில அரசும் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இப்புதிய முயற்சியைப் பாராட்டி உள்ளன.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் நூலகம் வரலாறு படைக்க விருப்பதை அதன் தோற்றப் பொலிவும் நூல்களின் தொகுதி யும் உணர்த்துகின்றன.

பல்கலைக்கழக நல்கைக்குழு ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத் தின் கீழ் ஏறத்தாழ 50 இலக்க உருபா வழங்கியிருக்கிறது. பல்வேறு அறிஞர்களின் தனிப்பட்ட நூலகங்களும் விலைக்கு வாங்கப்பட்டு இந்நூலகத்தில் தனியாகப் பாதுகாக்கப் படு கின்றன.

தமிழில் வெளியாகும் அனைத்துக் காலமுறை இதழ்களும் இங்கு வாங்கப்படுவது இந்நூலகத்தின் சிறப்பாகும். இதில் உள்ள நூல்களில் பட்டியல் கணிப்பொறி வழி தொகுக்கப் பட்டு, ஆய்வாளர்களுக்குத் தேவையான செய்திகள் மின்னல் வேகத்தில் வழங்கப்படுகின்றன.

தமிழியல் குறித்து உலகளாவிய பல்கலைக் கழகங்களில் இது வரை செய்யப்பட்டுள்ள ஆய்வு விளத்தங்கள் கணிப்பொறி வழி தொகுக்கப்பட்டு ஆய்வாளர்களுக்குப் பயன்படுகின்றன. நுண்படங்கள், நிழற்படங்கள், வரை படங்கள், நிலப்படங்- கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் வசதியும் இந்நூலகத்தில் உள்ளது.

இந்நூலகத்தில் 31-3-89 முடிவில் இருந்த நூல்களின் எண் ணிக்கைகள் வருமாறு ;

தாய் நூலகத்தில்	10,630
காஞ்சி நடுவத்தில்	4,904
உதகை நடுவத்தில்	6,522
களஞ்சிய நடுவத்தில்	4,363
பேரகராதித் துறையில்	2,501
மண்டபம் நடுவத்தில்	645

நூலகத்திற்கு வரும் கால முறை இதழ்கள் : (Periodicals)

தமிழ்	602
ஆங்கிலம்	378

தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் ஆய்வுப் பணிகள் மக்களைச் சென்றடைய பதிப்புத்துறை உதவுகிறது. இதுவரை நூற்றுக் கும் மேற்பட்ட ஆய்வு நூல்களும், மறுபதிப்பு நூல்களும் ஆங்கிலத்திலும் தமிழிலும் வெளியாகி உள்ளன.

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மறுதோன்றி அச்சகம் என்னும் பெயரில் ஓர் அச்சகம் இயங்கி வருகிறது.

மாதந்தோறும் செய்திமலர் ஒன்று தமிழிலும் ஆங்கிலத்திலும் பல்கலைக் கழகச் செய்திகளைத் தாங்கி வெளிவருகிறது.

தமிழ்க்கலை என்னும் தமிழ் ஆய்விதழும், (Tamil Civilization) என்னும் ஆங்கில ஆய்விதழும் முத்திங்கள் இதழ்களாக வெளிவருகின்றன

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் இதுவரை திரட்டப் பெற்றுள்ள அரும் பொருட்களும் தொடர்ந்து சேரும் கலை எச்சங்களும் இவ்வருங்காட்சியகம் மிகச் சிறப்பாகத் திகழப் போவதைக் கோடிட்டுக் காட்டுகின்றன. தமிழ்ப் பண்பாட்டு அருங்காட்சியகம் ஒன்றை அமைக்க 3 கோடி உருபாவில் ஒரு திட்டம் வரைந்து நடுவண் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்டம் நடுவண் அரசின் ஆய்வில் உள்ளது. இத்தகைய அருங்காட்சியகம் அமைந்தால் தமிழரின் வாழ்வு கழகக் காலம் தொட்டு இன்று வரை பல்வேறு நிலைகளில் அரும்பொருள்களின் துணையுடன் பாதுகாக்கப்படும். உதகையில் மலையின மக்களுக்காக ஓர் அருங்காட்சியகம் அமையவிருக்கிறது. இதனை நடுவண் அரசு ஏற்றுக் கொண்டு முதல் தவணைத் தொகையை வழங்கியுள்ளது. இதன் மதிப்பீடு இரண்டு கோடி உருபாவாகும்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் செயல்படுத்தும் ஆய்வுப் பணிகள் மட்டுமின்றி அறக்கட்டளைகளின் வாயிலாகவும் பல்வேறு பொருள்களில் ஆய்வுப் பணிகள் நடந்தேறி வருகின்றன.

தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறை உருவாக்கியுள்ள 15 இலக்க உருபா அறக்கட்டளையில் வேத இந்து மதம், வைணவம், சைவம், ஆகிய சமயங்களின் ஆய்வும், கிறித்துவம், இசுலாமியம், சமணம் போன்ற பிற சமய ஆய்வுகளும் மேற்கொள்ளப் பெற்று வருகின்றன.

பாரத வைப்பகம் (வங்கி) அளித்துள்ள உருபா ஐந்து இலக்கம் அறக்கட்டளையில் குமுகவியல் ஊரக வளர்ச்சி குறித்த ஆய்வு குமுகவியல் துறையால் மேற்கொள்ளப் பெற்று வருகிறது.

இவையன்றி 18க்கு மேற்பட்ட அறக்கட்டளைகள் ஏறத்தாழ 31 இலக்க உருபா மதிப்புக்கு ஏற்படுத்தப்பட்டு ஆண்டுதோறும் பல்வேறு தலைப்புகளில் ஆய்வுகளும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகளும் நிகழ்ந்து வருகின்றன. இச் சொற்பொழிவுகள் உடனுக்குடன் நூல்களாகவும் உருப்பெறுகின்றன.

இறுதியாகத் தமிழ்ப் படைப்பிலக்கியத்திற்கான மிக உயர்ந்த பரிசாகத் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கும் மாமன்னன் இராசராசன் பரிசு திகழ்கிறது. ஒவ்வோர் ஆண்டும் தமிழில் வெளியாகும் மிகச் சிறந்த படைப்புக்குத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தால் இப் பரிசு வழங்கப் படுகிறது. நூலாசிரியருக்குப் பரிசுத் தொகையான ஓர் இலக்கத்து ஓர் உருபாயும் ஒரு பாராட்டுச் சான்றிதழும் கிடைக்கும்.

Scanned with CamScanner

ஞானபீடப் பரிசுக்கு இணையான இப் பரிசு தமிழில் படைப்பிலக்கியம் வளரத் துணைபுரியும். உலகெங்கும் உள்ள தமிழ் எழுத்தாளர்கள் இப் பரிசுக்காகத் தங்கள் படைப்புகளை அனுப்பலாம்.

இப்பரிசினை இதுவரை பாவோகி சுத்தானந்த பாரதியார் தம் 'பாரதசக்தி மகா காவியம்' என்ற நூலுக்கும், திரு. செயகாந்தன் தம் 'சுந்தரகாண்டம்' என்ற நூலுக்கும், திரு. கோவி.மணிசேகரன் தம் 'வேங்கைவனம்' என்ற நூலுக்கும் பெற்றுள்ளனர்.

இப் பரிசே அன்றிப் புத்தம் புதுத் துறைகளில் தமிழ் வளரவும், வளம்பெறவும், மருத்துவம், பொறியியல், இசை, சிற்பம், ஓவியம், மொழி பெயர்ப்பு முதலான பத்துத் தலைப்புகளில் ஒவ்வோர் ஆண்டும் தமிழில் வெளிவரும் படைப்பிலக்கியம் அல்லாத சிறந்த நூல்களுக்கு உருபா 5000/- மேனி பரிசு வழங்கப் பெறுகிறது.

சப்பானிய மொழியில் வெளியான திருக்குறள், செக் மொழியில் வெளியிடப் பெற்ற கழகப் பாடல்கள், மத்தளவியல் என்ற தலைப்பில் ஆசிய ஆய்வு நிறுவனம் வெளியிடப் பெற்ற ஒரு நூல் —ஆகியன இவ்வகையில் பரிசு பெற்ற குறிப்பிடத்தக்க நூல்களாகும்.

இவ் வகையில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கும் பரிசுகள் பற்றியும் அதன் கடைப்பிடிகள் பற்றியும் மக்களிடையிலும் அறிஞர்களிடையிலும் நிறைவான கருத்துகள் தோன்றவில்லை. அதற்கெனப் பல்கலைக் கழகம் வகுத்துக் கொண்ட நெறிமுறைகளிலேயே கூட பலவாறான நெகிழ்ச்சிகள் உள்ளனவாக அறிஞர்கள் கருதுகின்றனர். இதில் தலைமைகளின் வல்லாளுமை மறைமுகமாகச் செயல் படுவதாகவும் தலையீடுகள் நிகழ்வனவாகவும் கருத்துகள் வெளிவந்துள்ளன. இப் பரிசுக்கும் பல்கலைக் கழக நடைமுறைகளுக்குமே களங்கம் விளைப்பதாகும்.

சான்றாக 1988-ஆம் ஆண்டிற்கான இராசஇராசன் பரிசு, இன்றைய தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதிக்கு வழங்கப் பெற்றதில் பலவாறான குறைகள் எழுப்பப் பெற்றுள்ளன. இதற்கு முன்னும் அவ்வாறு குறைகள் கூறப்பெற்றதையும் கூட நாம் மறந்து விடலாகாது. அது பொது நிகழ்வெனத் தள்ளிவிடவும் கூடாது. இத்தகைய பெருமை மிகு பரிசு வழங்ககளில் குறைகள் எழுப்பப் பெறுவதை நாம் குறை கூறவும் முடியாது; குறைத்து மதிப்பிடவும் முடியாது. அக்குறைகள் கூறப் பெறாத முறையில் பல்கலைக் கழகம் இயங்குவதே பெருமைக்குரியது.

கலைஞர்க்கு அளிக்கப் பெற்ற பரிசில், கூறப் பெறும் குறைகள் ஆவன.

1. செயகாந்தனின் சுந்தரகாண்டத்திற்குப் பரிசளிக்கப் பெற்ற பின், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குள் அரசியல் புகுந்து விட்டது.

2. 1987-ஆண்டில், கோவி. மணிசேகரனுக்கு வழங்கப் பெற்ற பரிசுக்கு அன்றைய முதல்வர் ம. கோ. இராமச்சந்திரன் கடைக்கண் பார்வை இருந்ததாகக் கருதப் பெறுகிறது.

3. 1988-ஆம் ஆண்டில் இப் பரிசுக்கு எவருமே தகுதியில்லை என்பது தமிழ் இலக்கிய உலகத்தையே அவமதிப்பதாகும். அக்கால் ஆளுநராட்சியால் அவ்வாறு கருதப் பெற்ற தென்பது இன்னும் இழிவாகும். இனி, 88-ஆம் ஆண்டில் தகுதியற்றதாகக் கருதப் பெற்ற ஒரு நூலுக்கு 89-ஆம் ஆண்டில் பரிசு வழங்கியது எப்படி என்பது பலரது கேள்வியாகும்.

4. ஒவ்வோராண்டும் பரிசுக்கு என வந்த பொத்தகங்களைத் தேர்வு செய்ய ஒரு குழு அமைப்பது வழக்கம். அதுபோல் இந்த ஆண்டும் நடுவர் சனார்த்தனம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் ச. அகத்தியலிங்கம், சிட்டிபாபு, முத்துக்குமரன், தமிழண்ணல், கோ. செல்வம், வேலு(ப்பிள்ளை) ஆகியோரைக் கொண்ட ஒரு குழு அமைக்கப் பெற்றது. இது தவிர, ஒவ்வோராண்டும் தஞ்சைத் தமிழ் பல்கலைக் கழகத்தின் ஐந்து துறைகளின் தலைமைப் பேராசிரியர்களும் பரிசுக்கான தேர்வில் பங்கேற்பது வழக்கம். இவர்களில் சிலர் கடந்த ஆண்டுகளில் பரிசுக்கெனத் தேர்ந்தெடுக்கப் பெற்ற பொழுது, தடைகள் கூறியதாலேயே 88-ஆம் ஆண்டில் எந்தப் பொத்தகமும் தகுதியுடையது இல்லை என்று அறிவிக்கப் பெற்றதாகக் கூறப் பெறுகிறது. அதனால் அந்த ஐந்து துறைத் தலைவர்களையும், இந்த ஆண்டுத் தேர்வுக்காகக் கூப்பிடவே இல்லை என்று தெரிய வருகிறது. இஃது என்ன நடைமுறை?

5. கடந்த ஆண்டுகளில் பரிசுக்காகப் பொத்தகங்களை ஆய்வு செய்து கொண்டிருக்கும் போது, என்னென்ன பொத்தகங்கள் ஆய்வு செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பது கூடத் தெரிந்திருக்கிறது. இந்த ஆண்டு பல்கலைக் கழக வட்டாரங்களில் பலருக்குப் பரிசு குறித்து ஒன்றும் தெரியவில்லை. இறுதியில் நாளிதழ்களில்தான் முதல்வர் கருணாநிதிக்குப் பரிசு கொடுக்கப் பெற்ற செய்தி தெரியவந்தது.

6. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் இப்பொழுதைய துணை வேந்தராகவுள்ள ச. அகத்தியலிங்கம் காலத்தில் நடக்கும் ஊழல்கள், குத்தகைக் கொள்ளையடிப்புகள், ஆட்சிச் சீர்கேடுகள் போன்றவற்றைத் தொகுத்து அவ்வப்போது பலர் அரசுக்கு அனுப்பி வைத்தார்கள். அகத்தியலிங்கம் அவருக்குத் துணை போகிற பதிவாளர் சின்னையன் ஆகியவர்களின் நடவக்கைகளைச் செய்தியிதழ்களும் அம்பலப் படுத்தியிருந்தன. அத்துடன் துணை வேந்தருக்கு இவ்வாண்டு பதவி முடிய விருக்கிறது. அது தொடர்ந்து நீடிப்பதை அவர் விரும்புகிறார். இவையெல்லாவற்றையும் சரிகட்டுவதற்குத்தான் முதல்வரை மகிழ்விக்க வேண்டி இப் பரிசு அவருக்குக் கொடுக்கப் பெற்றதாக அனைவரும் பரவலாகக் குற்றஞ் சாட்டுகின்றனர்.

Scanned with CamScanner

தலைமை வழிபாடு! (HERO WORSHIP)

பர்--க. ப. அறவாணன்
தமிழியல் துறைத் தலைவர்
புதுவைப் பல்கலைக் கழகம், புதுச்சேரி

தமிழகத்திலிருந்து சோவியத்து ஒன்றியம் சென்றிருந்த ஒருவரைச் சோவியத்துச் செய்தியாளர்கள் சில கேள்விகளைக் கேட்டனராம். அவற்றுள் ஒன்று: "உங்கள் மொழி இலக்கியத்தில் மிகச் சிறந்த நூல் எது?" அவ்வினவிற்கு விடையிறுத்த தமிழ்நாட்டுக்காரர் திருவள்ளுவர் எழுதிய 'திருக்குறள்' என்று விடை அளித்தாராம். அவருடைய காலம் என்ன என்று மேலும் செய்தியாளர்கள் வினவினர்.

"கி.பி. 2ஆம் நூற்றாண்டுக்கு முன்"
—என்று விடையிறுத்தார் தமிழகச் செலவாளி.

(முன் பக்கத் தொடர்ச்சி)

7. இனி, பரிசு கொடுக்கும் நடைமுறைகள் ஓரிரண்டும் மீறப்பட்டிருப்பதாகக் கூறப்பெறுகின்றது. தழுவல் இலக்கியத்திற்குப் பரிசுதர நெறிமுறை தடைசெய்கிறது. ஆனாலும், பரிசு வழங்கப் பெற்ற கலைஞர் நூலான 'தென் பாண்டிச் சிங்கம்' என்னும் நூலின் முன்னுரையிலேயே அஃதொரு தழுவல் கதை என்னும் குறிப்பு அச்சிடப் பெற்றிருந்தும், அதற்குப் பரிசு தந்தது நெறிமுறையை மீறிய செயலாகவே அனைவராலும் கருதப் பெறுகிறது.

8. இனி, பரிசுக்கு அனுப்பப் பெற்றிருந்த பிற நூல்களில் ஒன்று தானும் பிரித்துப் படிக்கப் பெறாமலேயே கட்டாகக் கட்டப் பெற்ற நிலையிலேயே இருப்பதாகக் கூறப்பெறுவது மேற் கண்ட திரைமறைவு நாடக உத்திகளை உறுதிப் படுத்துகிறது.

மொத்தத்தில் பல்கலைக் கழகம் நல்ல நோக்கத்தின் அடிப் படையில் அமைக்கப் பெற்றிருந்தாலும் ஊழல் பெருச்சாளிகள் அதன் அழகிய கட்டடங்களை உட்குடைந்து அதன் நோக்கங்களைச் சேதப் படுத்துவது, பல்கலைக் கழக அமைப்பிற்கே ஒரு பெருத்த இழுக்கும் அவமானமும் ஆகும்.

இதன் விடைகளையும் விளைவுகளையும் அரசின் முடிவுக்கே விட்டுவிடுவதல்லாமல் நாம் செய்வது என்னவாக இருந்துவிட முடியும்? அன்பர்களே ஆய்ந்து முடிவு செய்து கொள்வார்கள்.

அடிப்படை: 1 தமிழ்ப் பல்கலைக் கழகம் ஓர் அறிமுகம். சிறு வெளியீடு 1989.

2. நக்கீரன், துக்ளக் போன்ற பிற இதழ்கள்.

Scanned with CamScanner

"கடந்த 1800 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்!" என்று செய்தியாளர்கள் தொடுத்த அடுத்த வினவிற்கு விடையிறுக்க முடியாமல் தமிழ்நாட்டுக்காரர் திணறியதாக ஒரு செய்தி உண்டு.

இதனுடன் இன்னொரு செய்தியையும் இங்கே சேர்த்து நினைத்தல் வேண்டும். தமிழர்கள் வேறு எந்த இந்திய மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தலைமை வழிபாட்டினர் என்ற கணிப்புப் பலராலும் பேசப்பெறுகிறது; எழுதப்பெறுகிறது. திரைப்படத் துறையில், அரசியல் துறையில், ஆட்சித் துறையில், இன்னபிற அனைத்துத் துறைகளிலும் தமிழர் தலைமை வழிபாட்டுப் பழக்கத்தினர் என்ற கருத்து அடிக்கடி சொல்லப் பெறுகிறது. இக்கணிப்பு மிகச் சரியானதாக இருக்கும் என்பதை அண்மைக் காலத்தில் நிகழ்ந்த ஒருசில நிகழ்ச்சிகள் நமக்கு மெய்ப்பித்துக் காட்டுகின்றன.

1. தலைமையமைச்சராக இருந்த இந்திரா காந்தி அக்டோபர் 31, 1984-இல் இறந்தபோது, அவர் இறப்பைத் தாளாத இந்தியருள் தமிழர் மட்டுமே தற்கொலை செய்து கொண்டனர். சான்றாக, நான்கு தமிழர்கள் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டனர்; மூன்று பேர் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டனர்; ஒருவர் நஞ்சுண்டு தற்கொலை செய்து கொண்டார்; ஏழு பேர் நெஞ்சதிர்ச்சியால் இறந்து போயினர். ஒரிசாவில் உள்ள கட்டாக்கில் ஒருவர் தீக்குளித்துத் தற்கொலை செய்து கொண்டார். அவரும் தமிழரே. மலேசியாவில் ஒரு தேநீர்க் கடைக்காரர் தூக்கிட்டுத் தற்கொலை செய்துக் கொண்டார். அவரும் தமிழரே. இந்திரா பிறந்த உத்திரபிரதேச மாநிலத்திலோ, அவர் குடும்பம் வளர்ந்து தழைத்த காசுமீர் மாநிலத்திலோ, அவர் கட்சி ஆட்சியிலிருந்த வேறு எந்த மாநிலத்திலோ யாரும் தற்கொலை செய்து கொண்டுவிடவில்லை; நெஞ்சதிர்ச்சியால் இறந்துவிடவும் இல்லை.

2. தமிழகத்தில் முதலமைச்சராக இருந்த திரு. ம. கோ. இரா. (எம்.ஜி.ஆர்.) 1987. டிசம்பர் 24-இல் இறந்தார்; சாகுமுன் சில ஆண்டுகள் நோய்வாய்ப்பட்டிருந்தார்; அதனால் பேச இயலாதும் இருந்தார். பின்பே இறந்தார். இறப்பிற்குப் பின், தமிழகம் எங்கும் ஏறத்தாழ முப்பது பேருக்கு மேற்பட்டோர் தற்கொலை செய்து கொண்டனர் என்பது செய்தி.

> "திரு. ம.கோ.இரா. அவர்கள் உடல்நலம் குன்றி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட போது பதினேழு பேர் தற்கொலை செய்தும், நெஞ்சதிர்ச்சி கொண்டும் இறந்தனர். பத்தொன்பது பேர் தீக்குளிப்பு முயற்சியை மேற்கொண்டு தடுக்கப் பெற்றனர். திருவாட்டி. இந்திராகாந்தி இறந்தபோது இருபது பேர் தற்கொலை செய்து கொண்டதுடன், இருபத்தியொரு பேர் தற்கொலைக்கு முயன்று தடுக்கப் பெற்றனர். (இந்து 16-11-84). தில்லி நடுவண் அரசு நடவடிக்கையால்

ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என். டி. இராமாராவ் பதவியை இடைக்காலத்திற்கு இழக்க நேர்ந்தது. அப்போது ஆந்திராவில் யாரும் தற்கொலை செய்து கொள்ளவும் இல்லை. என். டி. இராமாராவ் பதவி இழப்பைத் தாளாத தமிழர் ஒருவர் தமிழகத்தில் தற்கொலை செய்து கொண்டார்''.

3. வேறு எம்மாநிலத்திலும் இல்லாத அளவிற்குத் தமிழகத்தில்-தான் நடிகர் பெயரில சுவைஞர் (இரசிகர்) மன்றங்கள் ஆயிரக்-கணக்கில் இயங்குகின்றன. புதுவை ரசினிகாந்த் சுவைஞர் மன்றத்தினர், ரசினிகாந்த் தம் மனைவியுடன் சண்டையிட்டுப் பிரிந்திருந்த காலத்தில், அவர்கள் இருவரும் பேசிக் கலக்க வேண்டும் என்பதற்காக உண்ணு நோன்பே இருந்தனர்.

மேற்கண்டவை தலைமை வழிபாட்டின் வெளிபாடுகள். இப்-படித் தமிழர் ஏனைய இன மக்களைவிடக் கூடுதலாகத் தலைமை வழிபாட்டினராக இருப்பது, இருப்பதற்குரிய காரணம், அதனை நீக்கும் வழிமுறை ஆகியவற்றைக் கண்டறிவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழர்கள் பின்பற்றும் மதங்களையும் உற்று நோக்கினுல்
தலைமை வழிபாட்டின் இன்னெரு புறக் கூறும் புலப்படும். தமி-
ழர்களிடையே வழங்கும் கட்சிகள் அனைத்தும் தனி மாந்தச்
சார்பினவாகவே இருக்கும். அவை மெய்ம்ம(தத்துவ)ச் சார்-
புடையனவாக இரா. ம, கோ. இரா. கட்சி, இந்திரா கட்சி,
காந்தி கட்சி, அண்ணு கட்சி, பெரியார் கட்சி என்ற தனி மாந்த
அடிப்படையில் கட்சிகளைக் குறிப்பதும் பின்பற்றுவதும் வெளிப்-
படை. இதனைப் போலவே தமிழர்கள் பின்பற்றிய / பின்பற்றும்
மதங்கள் கூட (மெய்ம்ம) தத்துவ அடிப்படையிலான மதங்கள்
என்பதைவிடத் தனி மாந்த அடிப்படையிலான மதங்கள் என்று
குறிப்பதே மிகச் சரியாக இருக்கும். சான்று: புத்த மதம், சைன
மதம், ஏசு மாதம், நபி மதம், சாக்தம், சௌமாரம், சிவ
மதம், விட்ணு மதம், ''தத்துவத் தரிசனங்கள்'' அல்லது கட்சிக்
கோட்பாடுகள் என்பவற்றைவிடத் தனி மாந்த ஈடுபாடு அதனுல்
தோன்றும் வழிபாடு தமிழரிடம் பல்கி இருக்கிறதென்பதற்கு
மேலே உள்ளவை சான்றுகள். அனைத்துலகப் பெருமை பெற்ற
மெய்ம்மம் (தத்துவம்) சார்ந்த இயக்கங்கள் கூடத் தமிழ் மண்-
ணிற்கு வருகிறபோது தனி மாந்தக் கட்சிகளாகக் குறுகிவிடு
வதைக் காணலாம். பொதுவுடைமைக் கட்சி தமிழர்களைப்
பொறுத்தவரை இலெனினைச் சார்ந்த இயக்கமாகவும்,
மார்க்சைச் சார்ந்த இயக்கமாகவும் அல்லது உருசியாவைச்
சார்ந்த இயக்கமாகவும், சீனுவைச் சார்ந்த இயக்கமாகவும்
இயங்குவதைச் சுட்டிக் காட்ட வேண்டும்.

தலைமை வழிபாட்டுக்குக் காரணங்கள் எவை என்பது
ஆராயத் தக்கது. அனைத்து வழிபாட்டுக்கும் அடிப்படை
அச்சமும் அன்புமாகும் என்பது மானிடவியல் அறிஞர் பலர்தம்
கருத்து. இவற்றுள் அச்சமே முதலாவது காரணமாகவும், தலை-

Scanned with CamScanner

மைக் காரணமாகவும் இருந்தது. பல மதங்களின் தோற்றத்திற்குக் காரணம் அச்சமே 1. அச்சத்திற்குப் பின்பு மாந்தவினம் மேலும் வளர்ந்த நிலையில் இணைந்தது அல்லது இணைத்துக் கொள்ளப்பட்டது அன்பு என்று கருதலாம்.

தலைமை வழிபாட்டிற்கு மேற்கண்ட இரண்டு காரணங்கள் (அச்சம், அன்பு என்ற இரண்டு) மட்டுமல்லாமல், கண்மூடித்தனம், தன்னம்பிக்கையின்மை ஆகியனவும் காரணமாக அமைந்துள்ளன. தலைமை வழிபாட்டிற்கு மூல ஊற்றாக இருப்பது தாழ்வுணர்ச்சியாகும் (Inferiority Complex). உலகத்தோடு ஒத்துச் செல்லும் முயற்சிகளால் கொண்டுள்ள தேவைக்குக் குறைவான உணர்ச்சி; தன் திறமைகளில் நம்பிக்கைக் குறைதல், தன்னைப் பற்றியும், தன் ஆற்றலைப் பற்றியும் பிறரோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதெல்லாம் தன்னுடைய திறமை குறைவானது என்று முடிவு செய்து கொள்ளுதல், தாழ்வு மனப்பாங்கு என்று உளவியல் அறிஞர்கள் வரையறுப்பர். இத்தாழ்வு மனப்பான்மையே மனமுறிவு அல்லது வெறுக்கைக்குக் (Frustration) காரணமாகிறது. தமிழ்க் குமுகத்தில் மனமுறிவுகள் மிகுதியாகப் பெருகி வளர்வதற்குப் பல்வேறு வாய்ப்புகள் உள்ளன. மாந்தனுடைய முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடிய அரசியல் சட்டங்கள் ஒரு பக்கம்; அவனுடைய உணர்ச்சிகளைத் தடைப்படுத்தும் குமுகக் கட்டுப்பாடுகள் மறு பக்கம்; காதல், திருமணம் முதலிய குற்றால் நேருகின்ற இடையூறுகள் இன்னொரு பக்கம்; வாணிகத்தில் நேரும் கடும் போட்டிகள் பிறிதொரு பக்கம்; தொழில் செய்யும் இடங்களில் நிகழ்கின்ற பூசல்களும், அவற்றைத் தொடர்ந்து வருகின்ற அல்நெறிகளும் (அநீதிகளும்) பிறிதொரு பக்கம்; மனமகிழ்ச்சியைக் கெடுக்கின்ற அனைத்துலக அரசியல் நிலைகளும், குடும்பத்தில் ஏற்படுகின்ற சிக்கல்(தகராறு)களும், பொருள்டிப்படைக் குறைபாடுகளும், இன்னொரு பக்கம். இவை அனைத்தும் ஒருவனுடைய வாழ்க்கையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ தாக்குகிறபோது மாந்தன் மனமுறிவுக்கு உள்ளாகிறான். தமிழர்தம் குடும்பங்கள், தமிழர்தம் சாதிகள், தமிழர்தம் ஊர்கள், ஊராட்சி, நகராட்சி, வட்ட, மாவட்ட, ஆட்சி முறைகள், பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழக ஆட்சி முறைகள், அரசின் ஆட்சி முறைகள், ஆகிய அனைத்தும் தமிழர்களைத் தாழ்வுணர்ச்சியிலிருந்தோ, மனமுறிவிலிருந்தோ மீட்கும்படியாக அமையவில்லை. எனவே, தலைமுறை தலைமுறையாக, நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வரும் தாழ்வுணர்ச்சியாலும் புதிய அறிவியல் உலகம் சார்ந்த ஏற்றத்தாழ்வுடைய குமுக இக்கட்டுகளாலும், அரசு நடைமுறைகளாலும் மனமுறிவு மக்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடுகிறது.

தாழ்வுணர்ச்சி, மனமுறிவு ஆகியவற்றின் தொடர்ச்சியாகத் தன்னம்பிக்கைக் குறைவு ஏற்படுகிறது. தன்னம்பிக்கைக் குறைவு ஏற்பட்டு நிலைபெறும்போது மாந்தன் சார்புணர்ச்சிக்கு

(Dependancy) ஆளாகிறான். சார்புணர்ச்சியே அவனைத் தலைமை வழிபாட்டிற்கு அழைத்துச் செல்லுகிறது. ஆக, தாழ்வு மனப்பாங்கு எனத் தனி மாந்தனுக்கு ஏற்பட்ட உளவியல் சிக்கல் (Psychological Problem) பலருக்கும் ஏற்படவே, அது குமுகவியல் சிக்கலாக (Sociological Problem) விழுது விடுகிறது. தமிழரைப் பொறுத்தவரைத் தலைமை வழிபாட்டிற்கு மூல அடிப்படை இதுவே என்று கருத வேண்டியுள்ளது.

தாழ்வுணர்ச்சியின் விளைபயன் தலைமை வழிபாடு என்றால், தலைமை வழிபாட்டின் வித்து தாழ்வுணர்ச்சி ஆகும்.

தமிழ்க் குமுசாயமே காலம் காலமாக மனமுறிவுக் குமுகாயமாக (Frustrated Society) இருந்து வந்திருக்கிறது என்பதைத் தமிழர்களுடைய மதக் கோட்பாடுகள் உறுதி செய்கின்றன. வாழ்க்கையைத் துன்பம் என்று கொள்ளும் துன்பக் கொள்கையும், இவ்வாழ்க்கை பொய், உலகம் பொய், அனைத்தும் பொய் என்ற மாயைக் கருத்தும், (மாயாவாதமும்) பிறந்து வாழ்வதைவிட, இறந்து பிறவாப் பெருநிலை அடைவதே சிறப்பு என்ற மதக் கொள்கையும், இடும்பை நிலையை இயல்பு என்று ஒப்புக் கொள்ளும் 'விதி'க் கொள்கையும், தமிழர் மனமுறிவுக் குமுகாயத்தினராகவே இருந்து வந்துள்ளனர் என்பதை எடுத்துரைக்கின்றன.

நவகண்டம்: நவகண்டம் கொடுத்தல் என்ற பழக்கம் தமிழரிடம் தொடர்ந்து இருந்து வந்துள்ளது என்பதைத் தொல்காப்பியம், பரணி முதலான இலக்கண இலக்கியங்களும், சிற்பங்களும், கல்வெட்டுகளும் உறுதி செய்கின்றன; உணர்த்துகின்றன. அரசன் வெற்றிக்காக வேண்டிக் கொண்ட வீரர்கள், அரசன் வெற்றி பெற்றால் அதைக் கொண்டாடும் முகமாக, கொற்றவை முன்பு சென்று தம் தலையைத்தாமே அரிந்து தற்கொலை செய்து கொள்வர். இதனை நவகண்டம் கொடுத்தல், என்றும், அடிக்கழுத்தின் உடன் சேர்த்து அரிவர் என்றும் கல்வெட்டுகளும், இலக்கியங்களும் பேசும். அரசனும், மதமும் இணைந்து தலைமை வழிபாட்டையும், அதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகத் தற்கொலை முயற்சியையும் தலைமுறை தலைமுறையாக வளர்த்து வந்துள்ளன என்பதற்கு மேற்கண்ட நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

தாழ்வுணர்ச்சியின் பாரித்த வெளிப்பாடு தலைமை வழிபாடு என்ற நிலையில் தலைமை வழிபாட்டை விரும்பும் அதிகார வர்க்கம், அதனைத் திட்டமிட்டு வளர்க்கிறது. சான்றாக, திரைப்படம், வானொலி, தொலைக்காட்சி, புலவர்கள், பாவலர்கள் (கவிஞர்கள்), இதழ்கள், பேச்சாளிகள் ஆகியோர் வழியாகத் தலைமையை நோக்கிய வழிபாடு வளர்க்கப் பெறுகிறது. முற்காலத்தில் தொடர்புக் கருவிகள் (சாதனங்கள்) தற்காலம் போல் இல்லை. எனவே, புலவர்கள் அவர்கள் வழி எழுதப் பெறும் பிரபந்தங்கள், முதலானவற்றால் தலைமை வழிபாடு கட்டிக்காக்கப் பெற்றது.

Scanned with CamScanner

உயர்நிலையில் உள்ளோருடைய திறமைகளுக்குத் தெய்வீகம் கற்பிக்கப் பெற்றது. மாந்தனுகப் பிறந்த யாரும் திறமையைப் பயிற்சியால் பெற முடியும் என்பதற்கு மாற்ருகப், பெறமுடியாது அஃது இறைமையின் அருள் என்று மீண்டும் கற்பிக்கப் பெற்றது. சிறந்த அரசர்கள், தெய்வங்களின் இறக்கங்கள் (அவதாரம்), தெய்வத்திற்கு நிகரானவர்கள் என்று கற்பிக்கப் பெற்றனர். சிறந்த புலவர்கள், தெய்வீக அருள் பெற்றவர்கள், காளி அருள் பெற்றவர்கள் என்று கற்பிக்கப் பெற்றனர். சுருக்கமாகத் திறமையுடையோர் தனிமைப்படுத்தப் பெற்று இறக்க மாந்தர்களாக (அவதார புருஷராக) உயர்த்திச் சொல்லப் பெற்றனர். ஒரு சிலர் தம் உடைமையாக உயர்வு, உருவாக்கப் பெற்றது.

இந்நிலையில் பொதுமக்கள் (பாமரர்) தங்களிடம் இல்லாத ஆற்றல் (Power), தங்களிடம் இல்லாத கல்வி (Education), தங்களிடம் இல்லாத செல்வம் (Wealth), தங்களிடம் இல்லாத திறமை (Efficiency), தங்களிடம் இல்லாத தகுநிலை (Status) தங்களிடம் இல்லாத குணங்கள் (Qualities) ஆகியன தலைவரிடம் இருப்பதாக நம்ப வைக்கப் பெறுகின்றனர்; நம்புகின்றனர். இவற்றைத் தம்மால் அடைய முடியாது, அடைவதற்குத் தமக்குத் தகுதி இல்லை என்ற தாழ்வுணர்ச்சி, மனமுறிவாகித் தன்னம்பிக்கைக் குறைவாக வளர்ந்து, சார்புணர்ச்சியாக நிலைபெறுகிறது.

கற்பிக்கப் பெற்ற தலைமையை ஒப்புக் கொண்டு இணங்கிப் போவது எளிய பொது மக்களுக்கு (பாமரர்களுக்கு) எளிதாக இருந்தது; இருக்கிறது. தலைவனைப் பின்பற்றுவது அவர்களுக்கு எளிது. தலைவனுக்கு வாழ்க (ஜே) போட வேண்டியதுதான் அவர்களுடைய கடமை. எனவே, காந்தி வாழ்க என்று சொல்லுவது அவர்களுக்குச் 'சுளுவாக' இருக்கிறது. தலைவனைப் பின்பற்றுதல் எளிது; பகரமாக மெய்ம்மத்தை(தத்துவத்தை)ப் பின்பற்றுவது எளிது அன்று. காந்திக்கு வாழ்க போடுவது அவர்களால் முடியும். ஆனல் காந்தீயத்தைப் பின்பற்றுவது அவர்களால் முடியாது. பலராலும் சிவ வழிபாட்டைச் செய்யும் சைவராக இருக்க முடியும். ஆனல் சிவக் கோட்பாடாகிய சைவ உணர்வை அவர்களால் மேற்கொள்ள முடிவதில்லை. எனவேதான், மத மெய்ம்மங்கள் தத்துவங்கள் புரிந்து கொள்ளப்படுதலைவிட, போற்றப்படுதலைவிட, மதச் சடங்குகள், மதத்தின் இடத்தில் இடம் பெற்று விடுகின்றன.

வெறும் சடங்குகள் : (Mere Rituals), Religion = Philosophy; Religion—Rituals; மதம்— மெய்ம்மம். மெய்ம்மம்—வெறும் சடங்குகள். நம்மில் ஏசு மதத்திற்குரிய சடங்குகளைப் பின்பற்றுவோர் இருக்கிறோம்; நபி மதத்தின் சடங்குகளைப் பின்பற்றுவோர் இருக்கிறோம்; புத்த மதத்தின் சடங்குகளைப் பின்பற்றுவோர் இருக்கிறோம்; ஆனல் மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுவோர் இல்லை அல்லது மிகக் குறைவு. அதைப் போலவே, தலைவன்,

மெய்ம்மம் (தத்துவம்) என்ற இரண்டில் மெய்ம்ம(தத்துவ)த்-தைப் பின்பற்றும் செயல்பாட்டைவிட (Functional Aspect) தலை-வனைப் பின்பற்றும் தனிமாந்த வழிபாடு (Personality Cult) எளி-தாக இருக்கிறது.

தலைவனுக்குப் பின்னல் பெருங்கூட்டமே நிற்கிறது. அதனுல் மலிவுப் புகழும் (Cheap Personality), பதவிப் பயனும், பண ஈட்டமும் கிடைக்கின்றன. குடியரசு அமைப்புடைய முதலாளிய ஆட்சியில் இவை அவனுக்குப் பெருநிறைவையும், பாதுகாப்பை-யும் தருகின்றன. தொண்டர்க்குத் தனக்காக ஒரு தலைவர் இருக்கிறுர் என்பது சுளுவாக, பாதுகாப்பாக இருக்கிறது. இதனை உளவியலில் ஒன்றியமாதல் (Identification) என்பர்.

ஒன்றியமாதல் மூலம் தலைவனின் இன்பத்தில் அல்லது துன்பத்தில் பங்கேற்கப் பழக்கப்படுத்தப்படுகிறுன், தொண்டன். எனவே, தலைவனுடைய இன்ப துன்ப நிகழ்வுகள் அவனை மிகத் தாக்குகின்றன. கிட்டத்தட்ட சொந்தப் பகுத்தறிவையே அவன் இழந்து நிற்கிறுன். இவ்வாறு இழந்து நிற்போர் கூட்டமாகப், பெருங்கூட்டமாகத் தமிழகத்தில் இருந்து வருகின்றனர். இவர்-கள் ஒரு காலத்தில் அரசனைச் சார்ந்த, பகுத்தறிவை இழந்த கூட்டமாகவோ, மதத்தைச் சார்ந்த, பகுத்தறிவை இழந்த கூட்டமாகவோ, சாதியைச் சார்ந்த, அரசியலைச் சார்ந்த கூட்ட-மாகவோ சார்ந்து இருந்து வந்தனர். எனவே, அரசன், மதம், சாதி, ஆகியன இருந்த இடத்தில், தற்போது கட்சித் தலைமை இடம் பெற்றுள்ளது. தலைமை வழிபாட்டுக்கு உரிய மூல அடிப்-படை/மூலவர் மாறியதே ஒழிய மூலஇடமும் மாறவில்லை; வழி பாடும் மாறவில்லை. இது வெறும் இட மாற்றமே (Replacement) எனவே, தலைவன் இறக்கிறபோது தானே அழிந்தது போலும், தானே அழிய வேண்டும் போலும் இவன் உணர்கிறுன். அதன் விளைவே தற்கொலையாக முடிகிறது.

தமிழர்களுடைய இன்னேர் இயல்பும் இதனை உறுதி செய்-கிறது. இந்தியாவிற்கு அப்பால் வெளியின மக்களிடம் காணப்-பெருத ஒரு பழக்கம் தமிழர்களிடம் உள்ளது. அஃது இறந்த-வர்க்கு ஒப்பாரி வைப்பது. ஒப்பாரி வைப்பதையோ ஆர்ப்பரிப்-பதையோ, உலக மதமான கிறித்துவம் ஏற்றுக்கொள்வதில்லை; இசுலாம் ஏற்றுக் கொள்வதில்லை; ஆனுல் தமிழர் மதம் ஏற்றுக் கொள்கிறது. இறப்பை இயல்பு என்று ஒப்புக்கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் எதிர்த்து நிற்கவும் வளர்க்கப்பெற வேண்-டிய ஒரு மக்களினம், பழக்கம் பெற வேண்டிய மக்களினம், இறப்பு என்பது ஓர் ஈகம் (தியாகம்) என்று பழக்கப்படுத்தப் பெற்றதால்தான், ஒப்பாரி தமிழ் மக்களிடையே மட்டும் நிகழ்-கிறது. தலைமை வழிபாட்டின் மறைமுகமான குறுவெளிப்-பாடாக ஒப்பாரியைக் கணிக்கலாம்.

தலைமை வழிபாட்டை வளர்ப்பது தலைமையில் உள்ளவர்-களுக்கு நல்லது; ஊதியம்; எனவே, அஃது இடைக்காலத்தில்

Scanned with CamScanner

வளர்க்கப் பெற்றது; இக்காலத்திலும் திட்டமிட்டு வளர்க்கப் பெறுகிறது. முன்பு அரசனுக்குத் தெய்வீகம் ஏற்றுக் கொள்ளப் பெற்றது. ஆண்டவனே தெய்வம் என்று கற்பிக்கப் பெற்றது. அதன் வளர்ச்சி ஆள்பவனும் தெய்வம் என்று வளர்ந்தது. அத்தகு தெய்வம் இறக்கிறபோது விடுமுறை அளிப்பது, விழாக் கொண்டாடுவது, இரங்கல் கூட்டங்கள் தொடர்ந்து நடத்துவது, இதழ்களில் விளம்பரப்படுத்துவது, வானொலியில் விளம்பரப் படுத்துவது, திரைப்படம், தொலைக்காட்சியில் விளம்பரப் படுத்துவது ஆகியவற்றின் மூலம் பொதுவான (சாதாரண) ஒரு மாந்த இழப்பு ஈடு செய்ய முடியாத ஒரு பெரும் இழப்பு என்று கற்பிக்கப் பெறுகிறது. அயல் நாடுகளில் பெரும்பெரும் மேதைகள் அரசியல் வல்லுநர்கள், மடிந்தபோதும், அம்மக்கள் தமிழர்கள் அளவு தற்கொலை செய்து கொள்வதும் இல்லை; துக்கம் கொண்டாடுவதும் இல்லை.) இலெனினுக்குப் பிறகு உருசியா அழிந்துவிடவில்லை; இசுடாலினுக்குப் பிறகு சோவியத்து அழிந்துவிடவில்லை; மாசேதுங்குக்குப் பிறகு சீனா அழிந்துவிடவில்லை; சியார்சு வாசிங்டனுக்குப் பிறகு அமெரிக்கா அழிந்துவிடவில்லை, வின்சுடன் சர்ச்சிலுக்குப் பிறகு இங்கிலாந்து அழிந்துவிடவில்லை. இத்தகு அரசியல் மேதைகளின், திறலாளர்களின் பேராற்றலுக்கு முன் கால்பங்கு கூடப்பொருதவர்கள், இறப்பைச் சந்திக்கிறபோது தமிழர்கள் அலறுவதற்குக் காரணம்:

1. தமிழர்களிடமே உள்ள மெலிவுணர்வு (பலகீனம்).
2. செய்யப்படும் கருத்துப் பரப்பல் (பிரச்சாரம்)
3. (பரம்பரைத்) தலைமை வழிபாட்டுக் குணம்.

செய்யப்படும் கருத்துப் பரப்பல்: தமிழ்நாட்டில் மட்டும் அரசியல் சார்ந்த தலைமை வழிபாடும், அதனை ஒட்டிய தற்கொலைகளும் மிகுந்து இருப்பதற்குரிய காரணங்கள் ஆராயத்தக்கன. இப்பழக்கம் தொடர்வதற்கு ஒருபெரும் காரணம், அரசியல் காரர்களும். அந்தத்த மொழியில் வழங்கும் ஏடுகளும், இன்னமா தொடர்புக் கருவிகளும் தற்கொலை செய்து கொள்வோரை ஈகெள் (தியாகிகள்) என்று வருணிப்பதும், சிலைகள் எடுப்பதும், சாலை போன்றவற்றிற்குத் தற்கொலை செய்து கொள்பவர்களுடைய பெயரை வைப்பதும், தற்கொலை செய்து கொள்வோருடைய குடும்பங்களுக்குக் கட்சிகள் போட்டி போட்டுக்கொண்டு பொருள் உதவிகள் செய்வதும் காரணங்கள் (Are All Self Immolation?-Hindu).

தமிழர்களின் தொடர் வீழ்ச்சிக்கான காரணங்களுள் ஒன்று, தலைமை வழிபாடு என்பதை மறுத்தற்கு இல்லை. இது தலைமுறை தலைமுறையாகத் தொடர்ந்து வரும் தொற்றுநோய் என்பதையும் மறுத்தற்கு இல்லை. எப்பொருள் யாரால் சொல்லப்பட்டது, எத்தன்மையது, என்பவற்றைவிட, அப்பொருளின் மெய்ப் பொருள் காணுதல் வேண்டும் என்ற கொள்கை (சித்தாந்த)ப் பற்று இடம் பெற்று வளம் பெற்று வாழ்வதற்குப் பகரமாகத்

தனி மாந்தப் பித்தே இடம்பெற்றுப் போற்றுதலாக வளர்ந்து, தமிழரைத் தாழ்த்தி வருகிறது. இதற்குச் சரியான சான்று, ஈழ மண்ணில் நிகழும் நிகழ்ச்சிகள். அங்கே உள்ள ஈழத் தமிழ் அமைப்புகள் பலவற்றில் கொள்கை (சித்தாந்தமும்) ஒன்றே ஒன்றுதான்; ஆனால் அமைப்புகள் பல. இதற்குரிய காரணத்தை ஊன்றி ஆராய்ந்தால் ஒன்று தெளிவாகும். மெய்ம்ம (தத்துவ) அடிப்படை புறக்கணிக்கப் பெற்றுத் தனிமாந்த அடிப்படை போற்றப்பட்டதன் விளைவால், ஆளாளுக்கு இயக்கங்கள், அமைப்புகள் தோன்றி (மெய்ம்ம) தத்துவ ஒருமிப்பைத் தகர்த்து விட்டன. அதனால் செயல் ஒருமிப்பும். தகர்க்கப் பெற்றது. நம் நாட்டில் தோன்றி வளர்ந்து பல்கி மேலும் கிளைத்துக் கொண்டே இருக்கும் மதங்கள், கட்சிகள், கழகங்கள் ஆகியன வேறுபாடு உற்றதற்குக் காரணம் இதுதான்: காங்கிரசு இயக்கம், திராவிட இயக்கம், தமிழர் பின்பற்றும் பல மதங்கள், கழகங்கள் அனைத்தும் பல்வேறு கிளைகளாகவும். எதிரணிகளாகவும், கிளைப்பதற்குக் காரணம், தனி மாந்த மோதல் தான். கொள்கை (தத்துவ) மோதல் அன்று.

(It Is Not A Policy Conflict; It Is A Personal Contlict) தலைமை வழிபாட்டை வளர்த்தன் விளைவைத் தமிழர்கள் இன்று பட்டறி (அநுபவிக்)கிறார்கள் என்று சொல்ல வேண்டும்.

தலைமை வழிபாட்டைத் தவிர்க்க வழிமுறைகள்:

1. உன்னால் முடியாது; பெண்ணால் முடியாது; உங்கள் மொழியால் முடியாது; உங்கள் சாதியால் முடியாது; உங்கள் நிற இனத்தால் முடியாது—என்றெல்லாம்.

சொல்லப்பட்டுவரும்/மீண்டும் மீண்டும் ஓதப்பட்டு வரும் மொழிகள் அறிவியலுக்கு முற்றும் முரணானவை. எந்த மாந்தனாலும் முடியும், எந்தப் பெண்ணாலும் முடியும், எந்த மொழியாலும் முடியும், எந்தச் சாதியினராலும் முடியும், எந்த இனத்தினராலும் முடியும் என்று நம்மால் முடியும் என்ற நம்பிக்கை நம்மிடையே வளர்க்கப் பெறுதல் வேண்டும். நம்மால் முடியாது என்று வளர்க்கப் பெறும் முடக்கு நோயால் (வாதத்தால்) நாம் அனைவரும் மன அளவில் முடவர்களானோம். உள்ள குறை (ஊனம்) உற்றவர்களாக ஆகிவிட்டோம் என்பதே உண்மை, எனவே, இதன் அடித்தளமாக இருக்கின்ற மொழியை, தாய்மொழியை அனைத்துக் கட்டத்திலும் பயிற்று மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் வழிபாட்டு மொழியாகவும், அனைத்துக் கட்ட மொழியாகவும் ஆக்குதல் வேண்டும். மொழி இங்கே ஒரு கருவியாக மட்டும் செயல்படவில்லை. முடியாது என்ற முடக்கு நோயின் (வாதத்தின்) குறையை ஒடித்து நம்பிக்கை கொள்பவர்களாக ஆக்க மொழி ஒன்றால்தான் முடியும். கல்லாதவர், கற்றவரிடையே தனக்கு அனைத்தும் தெரியவில்லையே என்றும், போதிய ஆங்கிலம் தெரியவில்லையே என்றும், ஆங்கிலத்தில் பேசத் தெரிய-

Scanned with CamScanner

வில்லையே என்றும், எழுதத் தெரியவில்லையே என்றும், மனத்தால் நினைந்து முடங்கிக் கிடக்கின்ற ஆற்றல் உடையவர்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றனர். இவர்களைக்கூட விடுவிக்க ஒரே வழி, அவர்கள் மொழியாலும் அனைத்தும் முடியும் என்று செயல்படுத்துவதன் மூலம் நம்பிக்கை ஊட்டுவதே.

2. கூட்டுக் குடும்ப முறை உடைபட வேண்டும். அகவையான பிறகும் சார்புணர்ச்சி உடையவராக இளைஞர்கள் இருப்பதற்கு இஃது ஒரு தலைமையான காரணம். பெண் தந்தையைச் சார்ந்தும், பின்னர்க் கணவனைச் சார்ந்தும். பின்னர் மகனைச் சார்ந்தும் வாழ வேண்டிய இக்கட்டிற்கு இதுதான் காரணம்.

3. எவன் இறந்தாலும், கைலாசத்தில் இருப்பதாகக் கருதுகிற சிவனே இறந்தாலும் விடுமுறை விடுவது, விழாக் கொண்டாடுவது, தொடர் இரங்கல் கூட்டங்கள் நிகழ்த்துவது, பொய்ப் புகழ்ச்சி புகல்வது ஆகியன முற்றுமாகத் தடை செய்யப் பெற வேண்டும்.

4. அலுவலகங்கள், அரசின் ஆட்சித்துறைகள், இன்னபிற அனைத்திலும் இருக்கும் படிநிலைகள் (Classes in Position) உதவியாளர் (அட்டெண்டர்), ஏவலர் (பியூன்), தட்டச்சாளர், எழுத்தர், மேலாளர், தலைமை மேலாளர் என்பன போன்ற படிநிலைகள் முற்றுமாக ஒழிக்கப் பெறுதல் வேண்டும். இந்த அமைப்புகள் நிலை பெறுவதன் மூலம் தனக்கு மேலே உள்ள அதிகாரிக்கு அஞ்ச வேண்டும், வணங்க வேண்டும், வழிபட வேண்டும் என்ற தலைமை வழிபாட்டு உணர்ச்சி வளர்க்கப் பெறுகிறது. அவன் கடமையை வணங்க வேண்டுமே தவிர, மாந்தனை வணங்க வேண்டுதல் தேவையில்லை என்ற நிலை உருவாக்கப் பெறுதல் வேண்டும்.

5. ஊராட்சி, நகராட்சி, வட்ட, மாவட்ட, மாநில, மைய அலுவலகங்கள் அனைத்திலும் நடுவத்தை நோக்கிக் குவிக்கப் பெற்றிருக்கும் அதிகாரங்கள் பங்கீடு செய்யப் பெற்று அங்கே பகிர்ந்தளிக்கப் பெறவேண்டும். (to decentraliste all powers)

6. பள்ளிக்கூடம், தொடங்கிக் கல்வி நிறுவனம் ஒவ்வொன்றிலும் படிக்காத ஏழை எளிய (பாமர) மக்களிடத்திலும், ஆங்காங்கே தலைமைப் பயிற்சி (தேர்தல் பயிற்சி இல்லை) (Leadership Training) தொடர்ந்து வழங்கப் பெறுதல் வேண்டும். ○

....

அடிக்குறிப்புகள்:

1 Paul Radin—Primitive Religion—Its Nature and Religion, PP-5-6.

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

○ : *1382* : தமிழ்ச் சான்றீர் வணக்கம்! தாங்கள் செயங்கொண்டத்தில் எமது மன்ற விழாவினில் கலந்து தொண்டமைக்கு மிக்க நன்றி. குறுகிய கால எல்லைக்குள் நிகழ்ந்த-தாலும் போதிய விளம்பரம் இன்மையானும் கூட்டம் அவ்வள-வாக இல்லையென்றே கருத முடிகிறது.

இருப்பினும், ''சும்மா ஏதோ கூட்டமாமே, போகிறவழியில் பார்க்கலாமே என்று வந்தேன். என்னமா பேசுகிருர் அவர்'' என்று சிலர் கூறிக்கொள்வதைக் கேட்க மகிழ்ச்சியாய் இருந்தது. இளைஞர் எழுச்சியை ஒன்று திரட்டுவதும், இதுபோல் பயன்மிகு வழியில் ஈடுபடுத்துவதும் எவ்வளவு அரிது என்பதை நான் அப்-போதுதான் அறிந்தேன். கட்டவிழத்து விடப்பட்ட காளையராய் சுற்றித்திரிந்த எங்களுள் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும், 'நாம் தமிழர் என்ற உணர்வையும் கொணர்ந்தது அந்த விழா என்-ருல் மிகையன்று. இதுபோன்று இன்னும் பத்துப் பொதுக் கூட்டங்களைத் தொடர்ந்து ஏற்பாடு செய்தால், தமிழுக்காகத் தன்னையே கொடுக்க முன்வரும் பத்துத் தமிழர்களாகிலும் கிடைப்பார்கள் என்று தோன்றுகிறது. உணர்வுள்ள இளைஞர்-களும் ஒன்றும் செய்ய இயலாது ஒடுங்கிவிடும் நிலைக்குக் காரணம் அவர்களின் பொருளியல் சிக்கலே என்பதை என்னளவிலிருந்து நோக்கும்போது உணரமுடிகிறது. சுருக்கமாகச் சொன்னல் என்-னுள் வித்தாய் இருந்த 'தனித்தமிழ்-தனித்தமிழ்நாடு கொள்கை முளைவிட்ட நாள் - அந்தநாள். அதனை வளர்ப்பதும்-விடுப்பதும் தங்கள் அன்புக் கைகளில்! நன்றியுடன்,

— மு. நாவளவன், வேலூர், வ.ஆ.

○ : *1383* : அன்பின் அய்யா! அவர்களுக்கு ஆலங்குளம் தம்பி தயாளன் எழுதும் மடல். அம்மாவையும் திரு. தமிழ் மணி அவர்களையும் கோவையில் நடுவண் சிறையில் சந்திக்கின்ற வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். எங்கள் நெஞ்சில் நிறைந்த தோழர் பொழிலன், முகிலன் நலம் அறிய ஆவல். அவர்கள் சென்னை வந்து இருப்பார்கள் என்று கருதுகிறேன். அம்மா,! அய்யாவை நாம் இமைபோல் காத்திட வேண்டும்.

இமயம் போன்ற நம் அய்யா தமிழர் காவலர். அவர் வாழ்ந்-தால் தமிழ் வாழும்; தமிழர் வாழ்வர்; தமிழகம் வாழும்!

அன்புடன், — தயாளன், ஆலங்குளம். நெல்லை மா.வ

○ : *1384* : அன்புசால் ஐயா! வணக்கம். தண்டமிழ் ஆசான் தங்களை நானறிவேன். என்னைத் தாங்கள் அறியீர். நான், மனத்-தால் தாங்களைத் தண்டமிழ் ஆசானுய் ஏற்றுக்கொண்ட தங்கள் மாணவன். தொல்சீர் தமிழ் மன்றம், தமிழ்ப் பண்பு,தமிழ்க்குலம் காக்கப்பட, பேணப்பட வேண்டுமாயின் அதற்கான ஒரே தீர்வு தனித் ''தமிழ் நாடே'' இதுதான் எனது உறுதியான இறுதியான எண்ணம்.

மீவிரித்த தமிழ்ப்புகழை இத்தரை முழுவதும் நாவிரிக்கப் பாவிரித்த பாவலரே, தாங்கள் 'கனிச்சாறு' என்ற தமிழ்ச்சாறு மணக்கும் நூல் கண்டேன். தங்கள் இயக்கத்தில் என்னையும் சேர்க்க இறைஞ்சுகின்றேன். —சோ. அருணகிரி, சாத்தனூர், திருச்சி.

O : 1385 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்குரிய ஐயா, வணக்கம்; தங்களின் கடுமையான உழைப்பையும், ஓய்விலா உளச்சலையும், ஈடிலா இதழ்ப் பணியையும், தந் நலமிலாத் தனிப் பெரும் தமிழ்த் தொண்டினையும் நொடிதோறும் எண்ணி எண்ணி நெஞ்சம் நெகிழ்கின்றேன். இந்நிலையில் தங்களின் குடும்பச் சூழ்நிலையும் தங்களின் மனவ்லிமையையும், தங்களுக்கு ஏற்படும் இடையூறுகளையும் உள்ளத்தால் உணர்கின்றேன். தங்களின் தளரா முயற்சி, அசையாத் துணிவு, தந்நலமிலாத் தனித் தமிழ்ப்பற்று — இவையே தங்களை நடத்திச்செல்கின்ற நன்னிலையை எண்ணி வியக்கின்றேன். இந்நிலையில் நமது குறிக்கோள் கொள்கை வெற்றி பெறும்; உரியகாலம் வாய்க்கும் என்பது என் எண்ணம்...

தங்களின் அரிய பணிகளுக்கும் பெரிய தமிழ்த் தொண்டுகளுக்கும் இடையில் தங்களின் உடல்நலனைப்பேணிக்கொள்ளுங்கள்; புலவர். ப. எழில்வாணன். க. மு. கல். மு. பள்ளப்பட்டி. (அஞ்)

O : 1386 : ஐயா, சுப்பனார் அவர்களே! தென்மொழி சுவடி 25 ஓலை 2-இல் தாங்கள் வரைந்திருந்த மடலைப் பார்த்தேன்.

பாவலரேறு பெருஞ்சித்திரனார் மீது தங்களுக்கு உள்ள அளவற்ற காழ்ப்புணர்வால், உமது மூளை கொதிப்பேறி, அதனால் என்ன எழுதுகிறோம் என்றுகூட அறியாமல். கிறுக்குத்தனமாய்க் கிறுக்கித் தள்ளியிருக்கிறீர் என்பதுதான் அம்முடிவு.

மாந்த மூளையிலிருந்துதான் கலை, பண்பாடு நாகரிகம், மற்றும் அறவியல், அறிவியல், அரசியல் நீர் சொல்லும் "நம்மிடம் இல்லாத" பொதுமை இயல் எல்லாம் தோன்றின. இயல்பாக வன்று. மேலும் மாந்தனுக்குத் தேவையான வியக்கத்தகு ஊர்திகள். கருவிகள், கோள்விட்டு கோள்செல்லும் அறிவியல் வளர்ச்சி முதலிய யாவும் மாந்த மூளையில் தோன்றியவையே!

ஆகவே, இந்த உண்மையை உணர்ந்து முதலில் செயல்படவேண்டியவர் நீர்தாம். பெருஞ்சித்திரனாரல்லர். உமது செயல்தான் அறிவுக்குறையானது; வீணானது; புரட்சிக்கும் ஒற்றுமைக்கும் எதிரானது; அவர் தொண்டன்று.

அவர் ஓர் அறிவுக் கருவூலம். அவருக்கு எல்லாம் தெரியும். அவருக்குப் பொதுமை இயல்பு பற்றிக் கூறும் தகுதி உமக்கில்லை. பொது உடமையை எப்படிப் பெறுவது, எப்படிப் பரப்புவது, எந்த உரிமையை முதலில் பெறுவது, அதற்கு என்ன செய்வது, என்பவெல்லாம் அவர் அறிவார். அவரின் தொண்டு தமிழினத்திற்கு மிகமிகத் தேவை என்பதை நீர் அறியமாட்டீர். எனவே, உமது வாயை மூடிக்கொண்டு, உமது தூவலைத் தென்மொழிப் பக்கம் திருப்பாமல் சும்மா கிடப்பீராக. இவண்

பாவலர் — சின்னப்பனார், கொம்மக்கோவில்.

(அட்டைமுதல் பக்கத் தொடர்ச்சி)

அறிவு, ஆற்றல், துணிவு உயர்ந்த கொள்கை, நிறைந்த பண்பு ஆகிய இவை யாவும் ஒருங்கே அமையப் பெற்ற தங்களைப் பற்றி

"எந்தத் தலைமுறை எழுந்து நிற்பானோ?
எவன்வந்து சொல்லி இவனை மீட்பானோ?"

— என்ற பாடலைப் படித்ததும் சில பாடல்களை எழுதினேன்.

1. பைந்தமிழ்ப் பண்பாட்டைப் பேணுகின்ற பொன்மனமே,
பண்டு மொழிகாக்கும் பாவலரே; எப்போதும்
தந்நலமே பேணுகின்ற தீயோர் நடுவில், நீர்
தப்பிப் பிறந்தீர் தனித்து!

2. தமிழர் படுந்துயரைத் தந்துயராய் எண்ணிக்
குமுறி வெடிக்கும் எரிமலையே! என்றும்
அமிழா உணர்வுடன் ஆற்றும்நும் தொண்டால்
தமிழ்வாழும் நாளும் தழைத்து!

3. அறநெறி ஓம்பி அறிவைப் புகட்டும்
குறள்வழிச் செல்லும் குணக்குன்றே! வாழ்வில்
படுந்துயர் எல்லாம் அடியோடு அகன்றே
நெடுங்காலம் வாழ்க நிறைந்து!

தங்கள் உண்மையுள்ள,
கோ. இரவிச்சந்திரன். சென்னை-24

O :1381 : பெருந்தகை பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, ஐயா, தமிழ்கூறும் நல்லுலகின் வட எல்லையை ஒட்டி நிற்கும் நகரம் பெங்களூர். வங்கக்கடலில் புயல் அடித்தால் இங்கு மழைபெய்யும். பல நூறாயிரம் தமிழர்கள் 'பதி எழாப் பெருங்குடியினராய்' இங்கு வாழ்கின்றனர். மண்ணை அகழ்ந்து பொன்னை எடுக்க ஆங்கில அரசால் ஒட்டிவரப்பட்ட. ஒட்டாண்டித் தமிழர்களும், இராமசாமி(முதலியார்) "திவானாக" இருந்தபோது ஓடிவந்த தமிழர்களும், மண்ணுக்கடியிலும், விண்முட்டும் கட்டிடங்களின் உச்சியிலும் மூச்சுமுட்ட உழைக்கின்ற சேலம் மாவட்டத்துச் செந்தமிழரும், பொதுத்துறை நிறுவனங்களில் புதைந்து கிடக்கும் வடஆர்க்காடு மாவட்டத் தமிழரும், அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து கிடக்கின்ற (!) (வாழ்கின்ற என்ற சொல் பொருந்தாது) நகரம் பெங்களூர்.

எங்கும் இருப்பதுபோல் இங்கும் தமிழர்கள் உட்பகையால் ஒன்றுபடாமல், தங்களைத் தாங்களே பகைத்துத் தனித்துக், குழுக்களாகப் பிரிந்தே வாழ்கின்றனர்.

இந்த பெங்களூர்த் தமிழர்கள் ஒன்றுபட்டால் இந்திய நாடாளுமன்றத்திலே, இந்த நகரத்தின் சார்பாய் ஒரு தமிழனை இடம் பெறச் செய்ய முடியும். அல்லது ஒரு தமிழ் எதிரியை நாடாளுமன்றத்திலே இடம் பெறாமல் இருக்கச் செய்யமுடியும்.

ஆனால் நம்மவர்களோ, திருவாட்டி செயலலிதாவிற்கு நீர்க்கோப்பு கண்டால் இங்கே மூக்கை உறிஞ்சுகின்றனர். கலைஞர் தலையிலே முடி குறைந்து விட்டதே என்று தங்கள் தலையைக் கெடுத்துக் கொள்கின்றனர். ஆனால் தமிழக அரசியல் விரகர்களோ (!) கர்நாடக சட்டப்பேரவைக்கு நமக்காக சில இடங்களை ஒதுக்கித் தரும்படி வீரேந்திர பாட்டீலிடமோ, எக்கடேவிடமோ கேட்பதில்லை. கேட்க அவர்களுக்கு நேரமில்லை, மனமும் இல்லை, நினைவும் இல்லை.

ஏற்கனவே இங்கே தமிழர்களைப் பகடி (கேலி) பேசுவதும், இழிவாய் (கேவலமாய்) ஒதுக்குவதும், அரசுப்பணியிலே வாய்ப்பில்லாமல் செய்வதும், வாய்ப்புக் கிடைத்தால் உதைப்பதும் நடக்-

கின்றன. காலப்போக்கில் இவற்றின் பின்விளைவுகள் அச்சமூட்டும் அளவிற்குப் பேருருவம் கொள்ளத்தான் போகின்றன. அப்போது கருநாடக மண்ணிலே கொட்டப்போகும் தமிழ் அரத்தத்திற்கு இன்றைய தமிழக அரசியலாரின் கையாலாகத்தனம்தான் கரணியமாகப் போகின்றது.

உலகத்தின் மூலைகளிலே இருக்கின்ற தமிழரின் நெஞ்சங்களி-லெல்லாம் அரியணைபோட்டு அமர்ந்திருப்பதாய்ப் பறையடிக்கும் தமிழகத் தலைவர்களின் நெஞ்சங்களில் தமிழின உணர்வு தலையணை போட்டு துயில்கின்றது என்பதே உண்மை.

தமிழகத்தில் வேற்று இனத்தவரை அரசியல் தலைவர்களாய், புகழ்மிக்க கலைஞர்களாய், எழுத்தாளர்களாய், வணிகர்களாய் தமிழக முதல்வராய்த் தூக்கிப்பிடிக்கும் தமிழக அரசியலார், வேற்று நாட்டிலே வாழும் தம் இனத்தவரை அடியோடு மறந்து விட்டது கொடுமையிலும் கொடுமை.

தென்மொழியின் 25ஆவது சுவடி 3 ஆம் ஓலையில்,

தெங்கிள நீர்க் குலையினிலே தேரை நோய் பாய்ந்ததைப்போல்
தென் தமிழ இனத்தில் வந்தே, தங்கிய வேற்றினத்தவர்க்குத்
தாள் பிடித்துக் கைகட்டித் தம் வயிறு வளர்க்கும்போது

எனப்படம் பிடித்துக்காட்டி, இப்படிப்பட்டோரை மடமனத்தர், மானமிலர் இக்காலத் தமிழரிவர், என்னும் சான்றிதழ் வழங்கிக், காலணி மாலை அணிவித்துள்ளது சாலப் பொருத்தமே! உணர்வு-கள் மங்கி, மறைந்து, அழிந்துவரும் இவ் வேளையில் இப் பாடல் ஒரு மாமருந்தாய் அமைந்தது.

எல்லையில்லாத் தொல்லை பட்டிருந்த பின்னும், பெற்ற பிள்ளையைக்கூடச் சிறைக் கொடுமைக்கு ஆட்படுத்திய பின்னும், தற்பெருமை பேசாமல், தம்பட்டம் அடிக்காமல், என்னை-விட்டால் யாருண்டு எனச் சொல்லாமல், எவர் முன்னும் கை-யேந்தி நிற்காமல், தகுதி அடிப்படையில் பதவி கேட்காமல், எளியனாய், என்னினத்தின் காவலனாய், ஏழையாய் வாழ்கின்ற பெருந்-தகையீர்! உம் பெருமையை உலகம் உணர்ந்து உம் வழியில் வரும்! வரும்! வரும்! வந்தே திரும்!

எனது கடுமையான பாலைநிலச் செலவில் தங்களின் எழுத்து களும், எண்ணங்களும்தாம் குளிர்ந்த நீரும் தணிந்த காற்றுமாய் ஒரு மன நிறைவைத் தருகின்றன.

யானைக்குத் தன் வலிமை தெரியாது. தாங்கள் ஒரு வேழம். ஆனால் தங்களின் எண்ணங்களைத் தங்களுக்கும் விற்கத் தெரி-யாது. தாங்கள் ஒரு விடுதலை வேங்கை. ஆயின் வணிகமும் தெரியாது. இதுதான் தங்களது பெரும் சிக்கல்!

ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் நாங்கள் 'திராவிட நாடு' இதழுக்குக் காத்துக்கிடப்போம், அண்ணாவின் 'தம்பிக்கு' மடலைப் படிப்பதற்காக. அவரும் விடுதலையைத்தான் எழுத்தாக்கி விற்-றார். ஆனால் தமது எழுத்திலே தேனைக் கலந்து, அந்தக் காலத்து இளைஞர்களின் தரத்திற்கு ஒப்பத் தம் எழுத்தின் தரத்தைத் தளர்த்தினார். அவர் பலாச் சுளையைத் தந்தார். தாங்கள் பலாப் பழத்தையே தருகின்றீர்கள். உலுத்துப்போன இந்தக் கும்பா-யமோ உரிக்கத்தெரியாததால் ஒதுங்கிப் போகிறது. இதுதான் உண்மை. அன்பன், இரா. பிரதாப்குமார். வெங்கா ஊர்-16.

(தொடர்ச்சி 31-ஆம் பக்கம்.)